பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பி.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 13 சனிக்கிழமை (26.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 128

# கண்காணிப்புக் குழுவில் நம்பிக்கை இழப்பு

# கடற் பிராந்தியத்தை கண்காணிக்க

# இந்தியாவை அனுமதிக்க வேண்டும்

## எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை

(நமது நிருபர்)

**சமாதான முயற்சிகளுக்கு உறுதுணையாக உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் நாம் நம்பிக்கை இழந்துள்ளோம். எனவே கடற்பிராந்தியத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு உதவியாக இந்தியா உட்பட மூன்று நாடுகளை ஈடுபடுத்த அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.**

இலங்கை கடற் பிராந்தியத்தில் இலங்கைக் கடற்படையினருடன் விடுதலைப்புலிகளின் கடற்படையணியும் சரிசமனாகச் செயற்படவேண்டும் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்தமை தொடர்பாக ஆறு எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று ஜனாதிபதி மாளிகையில் கூடி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸின் பேரியல் அஸ்ரப் அணி மற்றும் ஜே. வி. பி. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி கையொப்பம் இட்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஜனாதிபதியின் ஆலோ

(10ம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரின் கோரிக்கைக்கு
## இந்தியா உடன் பதிலளிக்காது

### வெளியுறவு அதிகாரி கருத்து

(புதுடில்லி)

இலங்கையில் அரசும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளை இந்தியா ஊக்குவித்து வருவதனால் இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வேண்டுகோள் தொடர்பாக இந்தியா உடனடியாக எந்தவிதமான கருத்தையும் கோரமாட்டாதென்று இந்திய வெளியுறவு அமைச்சை சேர்ந்த அதிகாரி நவசேர்ச் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 6எதிர்க்கட்சிகள் சேர்ந்து இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் தலையிடவேண்டும் என ஏகோபத்த வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்த வேண்டுகோள் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி நவச்சேர்ச் சர்மா மேலும் தெரிவிக்கையில்:

(10ம் பக்கம் பார்க்க)

## சங்கத் தலைவரின் கொலைக்கு எதிர்ப்பு
## தென்மராட்சியில் மினிபஸ் சேவை
## நேற்று இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மினிபஸ் சங்கத் தலைவர் மக்லன் அற்புதராஜா கடந்த 23ம் திகதி இரவு சாவகச்சேரி நகரில் வைத்து இனந்தெரியாத முகமூடி அணிந்த நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று முழுநாளும் தென்மராட்சிப் பகுதிக்கான மினிபஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இதனால் யாழ். நகரில் இருந்து தென்மராட்சிக்கு பயணம் மேற்கொள்வதற்கு பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.

தென்மராட்சிப் பகுதிக்கான மினிபஸ் சேவையைத் தவிர ஏனைய சேவைகள் வழமைபோன்று இடம் பெற்றன.

மேற்படி படுகொலை சம்பவத்தில் அவருடன் கூடச் சென்ற இளைஞர் ஒருவர் காயங்களுடன் உயிர் பிழைத்திருநதமை குறிப்பிடத்தக்கது.

(த)

## பெற்றோலின் விலை
## ஒரு ரூபாவால் உயர்வு

(கொழும்பு)

ஒரு லீட்டர் பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயினதும் பெற்றோலியப் பொருட்களினதும் விலைகள் வீழ்ச்சி கண்டுள்ளபோதிலும் கடந்த ஆறு மாதங்களிற்கு முன்னர் பெற்றோலியப் பொருட்களின் விலைகளை

(10ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உத்தரவில் முரண்
## ஜனாதிபதி-பிரதமர் முறுகல்

### முப்படைத் தளபதிகளுடன் மீண்டும் மந்திராலோசனை

(நமது நிருபர்)

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்த உத்தரவின் பிரகாரம் கொழும்பில் அமைக்கப்படவுள்ள புதிய பாதுகாப்பு தடைகளை அகற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொலிஸ்மா அதிபருக்கு பணித்ததை அடுத்து ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் விளைவாக அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்ளப் போவதாக அறிவித்திருந்தமையை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு சபையை கூட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

முப்படைகளின் தளகர்த்தாவான ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த உத்தரவுகளை அமுல்படுத்த வேண்டாம் என்றும் பாதுகாப்புக்குப் புலிகளினால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொலிஸ்மா அதிபருக்கும் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ள நிலையில் யாருடைய பணிப்பை அமுல்படுத்துவதென்று தெரியாமல் பாதுகாப்பு படை

(10ம் பக்கம் பார்க்க)

## சக்திகிரீவனுக்கு
## விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சைவச் சிறுவர் இல்ல வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றபோது மன்றில் ஆஜரான இந்துப் பேரவையின் செயலாளர் எஸ். சக்திகிரீவனை அடுத்த மாதம் 8ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்தை தென்மராட்சியில்

(10ம் பக்கம் பார்க்க)

## போரைத் தடுக்கும் சமாதானத்தை
## அரசும் - புலிகளும் தொடர வேண்டும்

### நல்லை ஆதீன முதல்வர் பகிரங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)



நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தக் கூடிய சமாதான முயற்சிகளை அரசும் விடுதலைப்புலிகளும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

கடந்த ஒரு வருட காலமாக நாட்டில் நிலவிவரும் யுத்தமற்ற சூழ்நிலை நிரந்தரமாக நீடிப்பதற்கு இது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் விடுத்த பகிரங்க வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு சரியான முறையில் அமுல் படுத்தாமைக்கும், அமெரிக்க நிதியுதவி மாநாட்டில் தாம் புறக்கணிக்கப்பட்டமைக்கும் தமது ஆழந்த அதிருப்தியை வெளியிட்டு சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை இடைநிறுத்துவதாக விடுதலைப்புலிகள் அறிவித்ததை அடுத்து ஏற்பட்ட கலகலப்பான சூழ்நிலையில் நல்லை ஆதீன முதல்வர் இப் பகிரங்க வேண்டுகோளை

(10ம் பக்கம் பார்க்க)


### முன்னாள் யாழ். ஆயர்

## அதிவண. தியோகுப்பிள்ளை
## நேற்று இறையடி சேர்ந்தார்

(தென்மராட்சி)

யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தின் ஓய்வுபெற்ற ஆயர் அதி வணக்கத்துக்குரிய அருட் கலாநிதி வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை தனது 86வயதில் நேற்று யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தார்.

1917ல் பிறந்த இவர் 1941ல் உரோமில் குருப்பட்டம் பெற்று தனது மறைப்பணியை ஆரம்பித்தார். இவர் 1945ம் ஆண்டு இலங்கைக்கு திரும்பி அன்று முதல் 1992ல் ஓய்வு பெறும் வரை கல்வி, ஆன்மீக, சமூகசேவைப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.



1973ம் ஆண்டு முதல் 1992ம் ஆண்டு வரை இவர் யாழ். கத்தோலிக்க மறைமாவட்டத்தில் ஆயராக பணியாற்றினார். இவரின் ஆன்மீக சேவையைப் பாராட்டி யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் பிரதேசங்களுக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு

## ஹக்கீமின் கோரிக்கைக்கு பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டாலும், சமாதான நடவடிக்கைகள் முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காக முஸ்லிம் மக்கள் பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான திலக்மாரப்பன, மிலிந்த மொறகொட ஆகியோர் சகிதம் நேற்று முன்தினம் திருகோணமலைக்குச் சென்று அமைச்சர் ஹக்கீமுடன் கலந்துரையாடிய வேலையிலேயே இவ்விதம் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஹக்கீம் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளும் முஸ்லிம் மக்களைப்போன்று சமாதானத்திற்கான பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும செயற்பட வேண்டும்.

இச்சந்திப்பில் எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டிய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், முஸ்லிம்மக்கள் வாழுகின்ற பகுதிகளில் ஏற்கனவே நிலைகொண்டுள்ள இராணுவத்தினரையும், பொலிஸாரையும் மளப் பெறாமல் இருப்பது எனவும் இதர முஸ்லிம்பிரதேசங்களில் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்துவது எனவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி, அதன்மூலம் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைப் போக்குவதற்கு ஏற்ற நிலைப்பாட்டிலேயே முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தற்போது இருக்கிறது.

அணமையில் மூதூர்ப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை தொடர்ந்து இன்னமும் சுமுகமான சுழ்நிலை அப்பகுதியில் திரும்பவில்லை.

இதன்பின்னணியில் போக்குவரத்துத தடைகளை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

மூதூர்ப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் தமது கடமைகளில் சரிவர ஈடுபடவில்லை என்று தான் கூறவேண்டும்.

இதனடிப்படையில் இனி வரும் காலத்தில் இந்த வன்முறைச்சம்பவங்களை அனுமதிக்க இடமளிக்கப் போவதில்லையென்று பிரதமரினால் உத்தரவாதம் தரப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன இவ்விடயம் தொடர்பாக கலந்து பேசுவதற்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் உதவியை நாடியுள்ளோம். பெரும்பாலும் இது கைகூடும் என்றே நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார். (வ-8)

### எம்.பி உறுதிமொழி

(வல்வெட்டித்துறை)

கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்திற்கு ஒரு தொகை நூல்களை அன்பளிப்பு செய்வதாக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உறுதியளித்துள்ளார்.

கடந்த காலயுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இந்த நூல் நிலையத்திற்கு நூல்கள் கொள்வனவு செய்து தருமாறு நூலக நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-63)

### குளவிகொட்டி பொலிஸ்பலி

(கொழும்பு)

குளவி கொட்டியதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும் 8 பொலிஸார் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பளை வெடக்தெனியப்பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த சிலரை கைது செய்யச் சென்ற பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்த போது அக்கும்பல் குளவிக்கூட்டிற்கு கல்லால் எறிந்ததால் இச்சம்பவம இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 8 பொலிஸாரில் சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

### தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் - கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் மூன்றாவது சுற்றில் இன்று பி.ப 4.45 மணிக்கு கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (உ-10)

## முன்பள்ளி கல்விச் செயற்றிட்ட

# வேலைப்பட்டறையில் பல்வகையான பயன்மிகு கருத்துக்கள் முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

2003ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகளை நோக்கி, சகல வளங்களையும் ஒரு முகப்படுத்தி வினைத்திறனை உடைய செயல் வடிவமொன்றை பெறும் நோக்கிலான முன்பள்ளிக கல்விச் செயற்திட்ட வேலைப்பட்டறை ஒன்று கடந்த புதனன்று யாழ். முன்பள்ளி கல்வி வேம்பாட்டு நிலையத்தால் நடாத்தப்பட்டது.

முதலாம் அமர்வில் முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தலைவர் சி. சிவநேயன் தலைமையில் இவ் ஆண்டிற்கான விரைந்த வேலைத் திட்டங்கள் பற்றிய முன்னெடுப்புக்களுடன் தூரநோக்குச் சிந்தனையுடன் கூடிய எமது மண்ணிற்கான முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் பற்றிய பல செயலாக்க வடிவங்கள் முன்வைக்கப்பட்டன.

முதலாம் அமர்வில் யாழ். மாவட்டம் முழுமைக்குமான ஒருங்கிணைந்த வலையமட்டச் செயற்பாட்டுக் குழுக்கள், ஐந்து கல்விவலயங்களில் ஆரம்பப் பிள்ளை அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் முன்னெடுப்புடன் வலயங்களிற்கான செயற்பாட்டுக் குழுக்களின் ஊடாகவும் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகதர்களின் பங்களிப்புடனும் முன்பள்ளிகளின் கல்விக்கான தேவைகள், பௌதீக வளங்கள், நவீனத்துவமான முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி, முன்பள்ளி ஆசிரியர்களின வேதனம் ஆகிய சகல விடயங்களையும் குழு நிலை ஆய்வுகள் முலம் ஆராய்ந்து பெற்றோருக்கான விழிப்புணர்வு சார் செயற்றிட்டங்களை முன்னெடுத்து மக்கள் மயப்படுத்தப்பட்ட, சமூக பங்களிப்பாக வெளிக்கொணர வேண்டிய பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

இவற்றை செயற்படுத்துவதற்கான பரவலாக்கப்பட்ட வேலைத் திட்டங்களையும் நடைமுறைச்சாத்தியமான அணுகு முறைகளையும் இவ்வாண்டில் முதல்நிலைப்படுத்த வேண்டிய தேவைகளாக ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை ஒருமுகப்படுத்தி கல்வித்திணைக்களத்தின் துறைசார்ந்த வழங்களின் ஊடாக முன்னெடுக்க வேண்டும என்றும் கருத்து கூறப்பட்டது.

※ முன்பள்ளி சிறார்களுக்கான மாதிரி முன்பள்ளிகள் ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்தில் குறைந்த பட்சம் இரண்டாவது அமைக்கபட வேண்டும்.

※ முன்பள்ளிச் சிறாரின் போசாக்கு மற்றும் அவர்களது சுகாதாரம் பற்றிய விடயங்களுககு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

※ தொடரும் உலகின் வளர்ச்சிக்கு ஏற்ப நவீன யுத்திகளுடன் கூடிய கற்றல் பாங்கினை விருத்தி செய்யவேண்டும்.

※ சிறார்களின் உடல்உள விருத்திற்கேற்ற சூழலை உடையதாகக் கொண்டு முன்பள்ளிகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

※ இச் சமாதானத்தை நோக்கிய காலப்பகுதியில் சர்வதேச உதவு தட்டத்தை விரையமற்ற முறையில வடிவமைத்து முன்னணித்தேவையை நோக்கிய செயல்வடிவத்தை பெறவேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இச்செயலமர்வில் மேற்கொள்ளப்படவேண்டிய செயல்வடிவங்களை முன்னெடுப்பதற்கான வழிவகைகளை ஒவ்வொரு பிரதேசத்திலிருந்து வந்த பெற்றோர், நிர்வாக மட்டப் பிரதிநிதிகள் சமூகமயப்படுத்தலில் வெற்றிகொள்ள முடியும் என்பதையும் அவை சார்ந்த விழிப்புணர்வுக்கான வழிவகைகளையும் கூறினார்கள்.

இரண்டாம் கட்டச் செயலமர்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகக் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரியின் வழிநடத்தலில் இடம்பெற்றது. (உ)

## தொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்க தனியான வங்கி

(கொழும்பு)

இளைஞர்களின் சுயதொழில் முயற்சிகளுக்கு கடன் வழங்கும் முகமாக தனியான வங்கி அமைக்கப்படவுள்ளது.

தொழில் அமைச்சும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் இணைந்து இவ்வங்கியை அமைக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு நிலையங்களில தமது பெயர்களைபதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு இவ் வங்கி ஊடாக கடன் வழங்கப்படும்.

வெளிநாடுகளில் வேலைபார்ப்பவர்களுக்கு வீடமைப்புக்கடன்கள், நலன்புரி வசதிகள் என்பனவும் இவ்வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது. (உ-8)

## தலைவர் பிரபாவுக்கு நினைவுக் கேடயம்

(திருநெல்வேலி)

ஆனையிறவுத் தள மீட்பு நினைவுக கேடயம் ஒன்றினை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு வடமராட்சி கிழக்கு பொதுமக்கள் சார்பாக வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் வழங்கவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு குடத்தனைச் சந்தியில் இருந்து அஞ்சலோட்டமாக இந் நினைவுக் கேடயம் எடுத்துச் செல்லப்பட்டு, பளையில் இடம்பெறும் ஆனையிறவுத்தள மீட்டு வெற்றி விழாவில் வைத்து விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (உ-43)

## சமுர்த்தி உத்தியோகத்தர் அதிருப்தி

(கல்வயல்)

குடாநாட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு குருநாகலில் பயிற்சி நெறிகளை நடாத்துவது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இப்பயற்சி நெறிக்காக குருநாகல் சென்று வருவதில் தாம் பல இன்னலகளை எதிர்கொள்வதாக சம்பந்தப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான் பயிற்சி வகுப்பொன்று எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை குருநாகலில இடம்பெறவிருப்பது குறிபபிடத்தக்கது. (உ-36)

## தந்தை செல்வநாயகம் நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

தந்தைசெல்வாவின் 26வது ஆண்டு நினைவுதினத்தை இன்று யாழ். நகரில் வெகு சிறப்பாக கொண்டாடுவதற்கு தந்தை செல்வா நினைவு அறக்காவற் குழு ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 9 மணியளவில் தந்தை செல்வா நினைவிடத்தில நடைபெறும் அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தந்தைசெல்வா நினைவுரையில் “காந்தய நெறிகளும் தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியமும்” என்ற பொருளில் இந்திய மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கா. பா. அறவாணன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில், சிறப்புவிருந்தினராக மதுரை அன்னை திரேசா பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் கலந்துகொள்ளவுள்ளார். (உ)

### கடைகள் எரிந்து நாசம்

(கொழும்பு)

கண்டி பத்தேகம நகரில் வர்த்தகக் கடைகள் மூன்று நேற்று முன்தினம் இரவு எரிந்து சாம்பலாகி உள்ளன.

இந்தத் தீ விபத்திற்கான காரணம் கண்டறிப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-8)

# எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு அரசு புலிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முன்னைய வேகத்துடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.**

**இவ்வாறு 6 எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து இரு தரப்பினரி டமும் கோரிக்கை விடுத்துள்ளன.**

கொழும்பு எதிர்க்கட்சித தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடந்த செய்தியாளர்கள் மாநாட்டில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட லக்ஷ்மன் கதிர்காமர்,

சகல இன மக்களும் சமத்துவமாக வாழக் கூடிய வகையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இரு தரப்பினரும் முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, தேசிய சமாதான முன்னணி ,கொம்யூனிஸ்ட் கட்சி என்பனவே பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் படி கோரும் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகி இருப்பது குறித்து இந்தக் கட்சிகள் கவலை கொண்டுள்ளன.

நீண்ட கால யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இக் கட்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சில் மீண்டும் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளன என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியமை அரசியல் தந்திரோபாயம் எனவும் அவர்கள் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம் பிப்பதற்கு முன்னர் சில நிபந்தனைகளை அரசுக்கு விதிக்கும் சாத்தியக் கூறுகள தென்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைப் புரிந்து கொண்டு தகுந்த முறையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நடந்து கொள்ளும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-8)

## இக்பால் அத்தாஸ் மீது பிரதமர் ரணில் பாய்ச்சல்

### இன்றைய நிலைக்கு இவரே காரணமாம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிரான பொய்யான தகவல்களை திவயின பத்திரிகையும், இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸும் வெளியிடுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர், பிரதமர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

கடல் பிரதேசங்களின் போர் நிறுத்த வரையறை தொடர்பாக இக்பால் அத்தாஸும் திவயின பத்திரிகையும் வெளியிட்ட தகவல்கள் கருத்துக்கள் என்பன பொய்யானவை.

திவயின பத்திரிகையில் வெளியான இச் செய்திகள் தொடர்பாக அப்பத்திரிகையை வெளியிடும் உபாலி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இத்தகவல்களை, போர்ச் செய்திகளை வெளியிடும் இக்பால் அத்தாஸும் வழங்கியிருப்பது தெரிய வந்துள்ளது எனவும் பிரதமர் அங்கு தெரிவித்துள்ளார். (உ-8)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு பதிவு ஆரம்பம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கான பதிவுகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

வடமராட்சி கிழக்கில் மாமுனை முதல் சுண்டிக்குளம் வரையிலான கிராம அலுவலர் அலுவலகங்களில் வைத்து யாழ். செயலகத்தில் இருந்து சென்று குழு இப்பதிவு வேலையை மேற்கொண்டது.

500 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (உ-43)

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக சிவபாதம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உமா சிவபாதசுந்தரம் வடக்குகிழக்கு மாகாண சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்த வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் மேற்கொண்ட தற்போதைய நிலைவரங்கள் குறித்த கலந்துரையாடலின் பின்னணியில் இப்பணி நீக்கம் இடம்பெற்றுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமான யாழ்ப்பாணம் தற்போதைய சமாதான சூழ் நிலையில் மீளக்கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் சுகாதார நிலை தொடர்பான செயற்றிட்டங்கள் மிக விழிப்புணர்வுடன் செயற்படுத்தப்பட வேண்டும். சுகாதார நிலை மோசமாக இருக்கும் போது ஓர் பிரதேசம் கட்டியெழுப்பப்பட முடியாது.

இந்த வகையில் பொறுப்புணர்வு இல்லாது செயற்படும் அதிகாரிகள் தொடர்பாக கவனம் எடுக்காமல் இருக்க முடியாது என்ற வகையிலேயே இப்பணி நீக்கம் இடம் பெற்றிருப்பதாக எஸ்.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகளின் தேவைப்பாடுகளான: ஆளணிப்பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை, தொலைபேசி வசதிகள் இல்லாமை, போக்குவரவு வாகனங்கள் இல்லாமை போன்றவை தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்ல உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## மீளப் பரிசீலனை செய்க

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு அதேயிடத்தில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் பொலிஸ் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் போக்குவரத்து அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

இத்தொகை அபராதம் விதிக்கப்படுவது தமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

வீதி அமைப்பு நிலமை மோசமாக இருப்பதாலும் ஏனைய பஸ் சேவையாளர்களுடன் போட்டி நிலவுவதாலும் இத்தகைய அபராதம் விதிக்கப்படுவது தமக்கு பாதகமாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு யாழ். வலயத்திற்குட்பட்ட இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றினைச் சேர்ந்த அலுவலகர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும்,

எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரத்துடன் கூடிய விண்ணப்படிவத்தினை யாழ் .வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (உ)

(கல்வயல்)

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் வரவு செலவுத் திட் உதவியாளர்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சை-2003 ற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தால் எதிர்வரும் யூன் முதலாம் திகதி கொழும்பில் நடததப்பட்வுள்ள இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்தினம் மே .5ஆம் திகதியாகும். (உ111)

# புலிகள் பேச்சை இடைநிறுத்தியிருப்பதை போருக்கான ஆயத்தமாக கொள்ள முடியாது

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக தற்போது எவ்வித பிரச்சினையும் இல்லை.

வடக்கு கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கடந்த திங்கட் கிழமை அன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தது.

இதனை அடுத்து ,வடபகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து புதிய திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா எனச் செய்தியாளர்கள் இராணுவத் தளபதியை கேட்ட கேள்விக்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடை நிறுத்துவதாகவே அறிவித்திருந்தனர். அவர்கள் பேச்சுவார்த்தைகளை இடை நிறுத்தி இருப்பது போருக்கான ஆயத்தங்களை எடுத்துக்காட்டி இருப்பதாகக் கொள்ள முடியாது.

எனினும், வடபகுதியில் இராணுவ மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு தமக்கு உத்தியோகப் பூர்வ அறிவிப்பு எவையும் கிடைக்கவில்லை எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)



## மட்டக்களப்பு நகரங்களில் படையினர் தீவிர ரோந்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரப் பிரதேசங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ள நிலையில் இலங்கை இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரின் பிரதான வீதிகள்,சந்திகள் ஆகியவற்றில் இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதை இடைநிறுத்திக் கொள்வது என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பை அடுத்தே மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. (வ)

## புற ஊதாக் கதிர் மூலம் சரும நோய்ச் சிகிச்சை

(கொழும்பு)

புற ஊதாக் கதிர்களைப் பயன் படுத்தி சரும நோய்களுக்கு நவீன முறையில் சிகிச்சை அளிக்கும் முறை இலங்கையின் தனியார் மருத்துவத் துறையில் முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிநவீன உபகரணங்களைக் கொண்டு குறுகிய அலைவரிசை கொண்ட புற ஊதாக் கதிர்களைப் பயன்படுத்தி குஷ்ட நோய், ஆஸ்மா, சிரங்கு, பீனிசம் மற்றும் சருமப் புற்றுநோய், அதிகரித்த சரும அரிப்பு நோய் ஆகியவற்றுக்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி சிகிச்சை முறை கண்டிப் பொது வைத்தியசாலையிலும், கொழும்பு ஆஸா,சென்ட்ரல் மருத்துவமனைகளிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (உ-10)

## தனியார் பாதுகாப்புத் துறை ஒழுங்கமைப்பு

### உள்துறை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் பாதுகாப்புத் துறையை ஒழுங்கமைப்பதற்கு உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய சகல தனியார் பாதுகாப்புச் சேவைகளையும் உள் துறை அமைச்சில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 280 நிறுவனங்களே அமைச்சில் பதிவு செய்யப் பட்டுள்ளன. மற்றும் பல தனியார் பாதுகாப்புத் துறைகள் உத்தரவுப் பத்திரம் இல்லாமல் நாட்டில் இயங்குகின்றன என அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (உ-8)

## கூட்டம்

(ஊரெழு)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் ஸ்ரான்லி வீதியில் உள்ள அதன் தலைமைக் காரியாலயத்தில் இன்று மு.ப 10 மணிக்கு மன்றத்தின் தலைவர் திருமதி என்.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-75)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

ரவிபாலசந்திரன் சரோஜினி, 322,கோவில் வீதி,நல்லூர்.

செல்லையா கந்தையா, சுழிபுரம் மேற்கு,சுழிபுரம்.

முத்தையா கிருஷ்ணன், கனகசபாபதி பாடசாலை வீதி,கோண்டாவில் மேற்கு.

பூமணி சித்திரவேல், இளையதம்பி வீதி,அரியாலை.

சந்திரதாஸ் சிவராணி, 149 5ம் குறுக்குத் தெரு,மணியந்தோட்டம், கொழும்புத்துறை.

தம்பி சுப்பிரமணியம்,222(638) கண்டி வீதி,அரியாலை. (உ)

# சிரியா, ஈரான் போன்ற மத ரீதியான ஆட்சி ஈராக்கில் அமைவதை அமெரிக்கா அனுமதிக்காது

## இடைக்கால அரசு அடுத்த வாரம் செயல்படும்

(வாஷிங்டன்)

**ஈராக்கின் எதிர்காலத்தை மற்ற நாடுகள் நிச்சயிக்க முடியாது. ஈரான் ,சிரியா போன்று மதவாத அரசாங்கம் அமைவதையும் அனுமதிக்க முடியாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.**

ஈராக்கில் ஈரான் போன்றதொரு மதவாத ஆட்சி அமைவதையோ, சிரியா அல்லது அப்பகுதியிலுள்ள மற்றைய நாடுகள் ஈராக்கின் வருங்காலத்தை நிச்சயிப்பதையோ அமெரிக்கா ஒரு போதும் அனுமதிக்காது என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ட் உறுதி படக் கூறியுள்ளார்.

இதனிடையே ஈராக்கியர்கள் தலைமையிலான புதிய அரசை அமைப்பதற்கான முயற்சிகள் அடுத்த வார இறுதியில் ஆரம்பமாகும் என்று அமெரிக்க தலைமை நிர்வாகி ஜேகார்னர் கூறியுள்ளார்.

ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூத்த ஆலோசகர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அறிஞர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களை ஜேகார்னர் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈராக்கியர்கள் தமது அத்தியாவசியத் தேவைகளும் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படுவதில் ஏற்பட்டு வரும் தாமதம் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள்.

இக்கூட்டம் முடிவடைந்த பின்னர் பக்தாத் செயதியாளர்களிடம் பேசிய ஜேகார்னர் ஈராக்கிய அரச ஊழியர்கள் கூடிய விரைவிலேயே வேலைக்கு திரும்ப வந்து சேர வேண்டும் என்றும், ஒரு வார வேலைக்குப் பிறகு அவசர கால ஊதியமும் அதன் பிறகு மாதச் சம்பளமும் தரப்படும் என்றும் தெரிவித்தார்.

ஈராக்கின் எண்ணெய் வருவாய் அந்நாட்டின் சீரமைப்பிற்காக மட்டுமே செலவிடப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் அகமட் ஷலாபி, ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக, புதிய தலைமையே அரசியல் சாசனத்தை வரையும் என்று கூறிய இவர்,

மக்களுக்கு அத்தியாவசியப் பொதுத் தேவைகளை வழங்குவதற்காக இடைக்கால ஆட்சி அமைக்கப்படும் என்றும் மேலும் கூறியுள்ளார். (பி-2)

## பொடாவை முற்றிலுமாக வாபஸ் பெற வேண்டும்

### தமிழக எதிர்க்கட்சிகள் தீர்மானம்

(புதுடில்லி)

பொடா சட்டத்தை மத்திய அரசு முற்றிலுமாக மீளப் பெற வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை வெளியிட்டுள்ளனர்.

பொடா சட்டம் தொடர்பாக தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டத்தின் போதே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்குமாறு அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க தவிர அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டிருந்த போதும், இக் கூட்டத்தில் இரண்டு பிரதான கம்யூனிஸ்ட் கட்சிகளும், காங்கிரஸ் கட்சிகளும் பங்கேற்க மறுத்து விட்டன.

கூட்டம் முடிவடைந்த பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசிய கருணாநிதி பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை மத்திய அரசினால் தடுத்து நிறுத்த முடியவில்லையென்றும், எனவே அந்தச் சட்டத்தை மீளப் பெறுவதே சரியானது என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை, பொடா சட்டத்தை மீளப்பெறுமாறு பிரதமர் வாஜ்பாயை விரைவில நேரில் சந்தித்துப் பேசப்போவதாகவும் கருணாநிதி தெரிவித்தார். (பி-2)

உலக தரிசனம்

### வடகொரியாவிடம் அணு ஆயுதம்

## முத்தரப்பு மகாநாடு முன்கூட்டியே முடிந்தது

(பியோங்யாங்)

வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டம் பற்றிய குற்றச்சாட்டுக்களை விவாதிப்பதற்காக வடகொரியா, சீனா, அமெரிக்கா ஆகியவற்றிடையே நடைபெற்ற முத்தரப்புப் பேச்சு வார்த்தை திட்டமிட்டதிற்கு ஒருநாள் முன்னரே முடிவடைந்துள்ளதென அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முனதினம் வாஷிங்டனில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட கொலின் பவல் பெய்ஜிங்கில் இடம் பெற்ற பேச்சு வார்த்தையின் போது முன்மொழியப் பட்ட யோசனை இதில் கலந்து கொண்டவர்களை நாடு திரும்பிய பின்னர் ஆராய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**அணுகுண்டு கையிருப்பில் உண்டு**

வடகொரியா தன்னிடம் ஆயுதங்கள் இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் எததனை ஆயுதங்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்த மறுத்து விட்டது.

பீக்கிங்கில் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுக்கள் முடிந்த பிறகு சாதாரண முறையில் பேசிக் கொண்டிருந்த போது அமெரிக்கத்துணை வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் ஹென்னியிடம் வடகொரியாவின் பிரதிநிதி ரிஹின் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா செயல்படுவதைப் பொறுத்து வடகொரியா அணு ஆயுத வளங்களைச் சோதித்துப் பார்க்கும் என்றும் ஏற்றுமதி செய்யக் கூடும் என்றும் அவர் கூறியுள்ளார். (பி-9,2)



மகாராஷ்டிர மாநிலத்தின் புனே நகரில் சார்ஸ் நோய் தாக்கப் பட்ட அன்னன், தங்கை இருவரும் அங்குள்ள டாக்டர் நாயுடு தொற்றுநோய் மருத்துவமனைக்கு மிகவும் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. புனேயில் மேலும் பலருக்கு சார்ஸ் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## சதாம் அரசின் பிரதி பிரதம மந்திரி தாரிக் அஸீஸ் சரணடைந்தார்

(வாஷிங்டன்)

பதவி கவிழ்க்கப்பட்ட ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அரசாங்கத்தில் பிரதிப் பிரதமராகவிருந்த தாரிக் அஸீஸ் அமெரிக்கப் படையினரிடம் நேற்று சரணடைந்துள்ளார்.

இவர் சதாமின் நெருங்கிய வட்டாரங்களில் மிகவும் பிரபலமானவராக விளங்கினார்.

அது மட்டுமன்றி தனது ஆங்கில மொழி ஆற்றலினால் ராஜதந்திர வட்டாரங்களிலும் புகழ் பெற்றிருந்தார்.

அமெரிக்க இராணுவத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அதிகமாகத் தேடப்படுவோர் பட்டியலில் 48வது இடத்தை வகிப்பவர் இவர். இவர் தப்பிஓடியிருக்கலாம் என்று ஈராக் போர் ஆரம்பித்த ஓரிரு நாட்களில் வதந்திகள் வெளியான போது அவற்றை பொய்ப்பிக்கும் விதத்தில் மறு நாளே ஈராக் தொலைக் காட்சியில் தோன்றி மக்களுக்கு பேட்டியளித்திருந்தார்.

இதன் பின்னர் அவர் எங்கிருக்கிறார் என்ற தகவல்கள் எதுவும் தெரியாமல் இருந்தது. தற்போது அதிர்ச்சி தரும் வகையில் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் தகவலை வெளியிட்ட இந்த அதிகாரி தன்னை யாரென இனங்காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

1970 ஆம் ஆண்டிலிருந்து சதாம் ஹுசைனின் ஆட்சியில் மக்கள் தொடர்பாடல் பிரதிநிதியாகச் செயற்பட்டு வந்த அவர், ஈராக்கின் வெளியுறவுத்துறை ஆலோசகராகவும் 1991ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது ஈராக்கின் வெளியுறவுத்துறை அமைச்சராகவும் ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய சர்வதேச அரங்குகளில் ஈராக்கின் பிரதிநிதியாகவும் இருந்து வந்தார். இவர் சதாம் ஆட்சியின் போது இடம் பெற்ற ஒரேஒரு கிறிஸ்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈராக்கின் முப்படைகளின் தளபதி, இராணுவப் புலனாய்வுத்துறை இயக்குனர், வர்த்தகத் துறை அமைச்சர் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-2)

## மூத்த தலிபான் தலைவர்கள் பாகிஸ்தானிலிருக்கிறார்கள்

### ஆப்கான் அமைச்சர் கருத்து

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தானின் குற்றங்களிற்காக தேடப்பட்டு வரும் மூத்த தலிபான் தலைவர்கள் பாகிஸ்தானில் இருப்பதாக நம்பப்படுகின்றது என்று அங்கு இரண்டு நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு திரும்பிய ஆப்கான் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா-அப்துல்லா கூறினார்.

காபூலில் நேற்று முன்தினம் ஈ.எல்.பிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார். ஆப்கானிஸ்தானில் நிலைத்தன்மைக்கும் அதைக் குலைக்கவும் அவர்கள் முயற்சி செய்து வருவதால் அவர்களை ஒப்படைக்கும் படி அவர் கூறினார்.

தலிபானின் ஆன்மீகத் தலைவர் முல்லா உமர், தலிபானின் உள்வுத் துறைத்தலைவர் முல்லா அப்துல்லா அதன் முன்னாள் உள்துறைப் பாதுகாப்புத் தலைவர் முல்லா பிறதர், கீழ்மட்டத்தளபதி அஸீஸ்ஹஜ்ஜீ ஆகியோர், கர்ஷாய் தம்முடைய பேச்சுக்களில் குறிப்பிட்ட தலிபான் தலைவர்கள் ஆவார்கள். (பி-9)

### இந்து பத்திரிகை மீது நடவடிக்கை

## ஜெயலலிதா அரசின் மீது பத்திரிகைத் துறையினர் சீற்றம்

(புதுடில்லி)

தமிழகத்தில் இருந்து வெளி வருகின்ற த ஹிந்து நாளிதழுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுப்பது குறித்து தமிழக அரசு ஆலோசித்து வருகின்றது.

இம் மாதம் 12,13ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெற்ற சட்ட மன்ற நடவடிக்கைகள் குறித்து இப்பத்திரிகை வெளியிட்ட செய்திகள் அவையின் பெருமையை குறைப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக பரிசீலனை செய்யுமாறு உரிமைக் குழுவுக்கு சபாநாயகர் காளிமுத்து உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதேவேளை, சட்ட மன்றத்தின் ஒலிபெருக்கியினை தமிழகப் பொலிஸாரின் உளவுப் பிரிவினர் இயக்கி வருவதாக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் பாலசுப்பிரமணியன் குற்றஞ்சாட்டியுள்ளார். இவரது கருத்தினையும் உரிமைக்குழுவின் பரிசீலனைக்கு பரிந்துரை செய்யவிருப்பதாக சபாநாயகர் காளிமுத்து தெரிவித்துள்ளார்.

இந்து பத்திரிகை மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றித் தமிழக சட்டமன்றச் சபாநாயகர் ஆலோசிப்பது குறித்து தமிழக பத்திரிகையாளர் சங்கமும் அரசியல் தலைவர்களும் ஆச்சரியமடைந்துள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் மதிப்புடன் பார்க்கப்படும் ஒரு பத்திரிகை மீது சிறுபிள்ளைத்தனமாக நடவடிக்கை எடுக்க முனைவது ஜெயலலிதா அரசு தமக்கு எதிராக எவருமே குரல் எழுப்பக் கூடாதென்ற ஜனநாயக விரோதக் கொள்கைளைக் கடைப் பிடிப்பதைக் காட்டுகிறது என பத்திரிகையாளர்கள் விமர்சிக்கிறார்கள். (பி-2)

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாக்-தொடர்ந்து ஆதரவளிக்கிறது

### யு.எஸ் உளவுத்துறைத் தலைவர்

(வாஷிங்டன்)

இந்தியக் கட்டுப்பாட்டு பகுதியில் இருக்கும் காஷ்மீர் பகுதியில் செயற்படும் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் உதவி வழங்கி வருவதாக அமெரிக்காவின் உளவுத்துறை இயக்குநர் ஜோர்ச்கினற் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைப் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கும் முகமாகவே தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் தொடர்ந் தும் உதவிவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை,அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இவ்விரு நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருப்பதாகவும், இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் தணியும் என்று ஜோர்ஜ் கிறைற் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலைப் போன்று மற்றுமொரு தாக்குதல் நடத்தப்படுமேயானால் அது போருக்கே வழிவகுக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுவருவதாகவும் குறிப்பிட்ட அவர் பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்திக்கு சீனா பெரிதும் உதவியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (பி-2)


# இலங்கையில் மொழிவாரி மாகாண சுயாட்சியை சமஷ்டி அமைப்பின் மூலம் உருவாக்க வேண்டும்

## 1949 இல் தந்தை செல்வாவின் தீர்க்க தரிசன மிகு தலைமைப் பேருரை

## இன்று தந்தை செல்வாவின் 26வது நினைவு தினம்

**இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஆரம்ப மாநாடு மருதானையிலுள்ள அரசாங்க குமாஸ்தா சேவைச்சங்க மண்டபத்தில் 18-12-49 அன்று நடந்த போது, கட்சியின் ஸ்தாபக தலைவர் உயர் திரு.சா.ஜே.வே.செல்வநாயகம், கியு'. ஸி. அவர்கள் அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அவ்வாரம்ப மாநாட்டில் தந்தையவர்கள் ஆற்றிய அரும்பேருரையின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

இலங்கையில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள், விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும் என்னும் தனி நோக்கத்துடன், யாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையை யாம்விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும். பழைய காலச் சரித்திரத்தை தெளிவாக நன்றாக ஆராய்ந்து பார்த்தால், தமிழ்த் தேசம்மக்கள் இந்த நாட்டிலே இப்போது எப்படியான நிலைமைகளுக்



கிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கூர்ந்து நோக்கினால் இது தான் ஒரேயொருவழி - வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது - என்பது நன்கு விளங்கும்.

16ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இன்நாட்டுமக்களே தங்களுககென அரசாங்கங்களை அமைத்திருந்தனர் ஆயின், யாங்கள் ஒரு விஷயத்தை மாத்திரம் ஊனறிப் பரிசீலனை செய்தல் வேண்டும். அதாவது, போர்ததுக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் இனம், தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். விஜயன் காலம் தொடங்கி பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் தேசிய இனத்தைப் பற்றி மாத்திரம் பேசப்படுகிறது. இவர்களைச் சிலகாலங்களில் தமிழ் மன்னர்களும் அரசு புரிந்தார்கள். எனவே, தமிழ் மக்கள் அவர்களிடையே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. ஆயினும், அது சிங்களத் தேசிய இனமும் சிங்கள அரசாங்கமுமே யாகும். பூமி சாத்திர சம்பந்தமான காரணங்களாலும் வேறு பல நியாயங்களாலும் இலங்கையின் வட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நெடுங்காலமாகத் தமிழர்களாகவே திகழ்ந்திருத்தல் வேண்டும். அதனால் பெரும்பாலும் தமிழ் மக்களையே கொண்ட வட பகுதிகளைத தென்பகுதியிலிருந்த சிங்கள இராச்சியங்கள் ஆடசி புரிவது வரவர கடினமாக இருந்திருத்தல் வேண்டும். இறுதியாக, இயற்கையாய் அமைந்த ஒரு பரிகாரம் கண்டு பிடிக்கப்பட்டது. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டளவிலே, வடபகுதி தமிழப் பிரதேசங்கள் பிரிந்து தனியரசாயின. இலங்கையின் தென்பகுதி சில வேளைகளில் 2, 3 இராச்சியங்களாக பிரிந்திருந்தாலும் சிங்களப்பிரதேசமாகவே இருப்பதாயிற்று.

### மொழி வாரிச் சுயாட்சி

சில காலங்களில் இந் நிலைமை மாறி இருந்தாலும் ,ஐரோப்பியர் வரும் வரை இச் சிங்கள -தமிழ் இனப்பாகு பாடு பல நூற்றாண்டுகளாக நிலை பெற்றிருந்தது.முதலிலே தமிழ் இராச்சியத்தை அழித்த ஐரோப்பியர் படிப்படியாகச் சிங்கள இராச்சியங்களையும் ஒழித்து விட்டார்கள். இதிலிருந்து நாம் பெறக்கூடிய பெரும் படிப்பினை,மக்களின்வாழ்க்கையிலும் அரசியலிலும் மொழி மிக முக்கியமானதென்பதேயாகும். சிங்களத் தேசிய இனமாகவும் தமிழ் தேசிய இனமாகவும் இலங்கை பிரிக்கப் பட்டிருந்தபோது கூட சிங்கள சாகியத்தினரிடையே தமிழ் மக்களும், தமிழ் சாகியத்தினரிடையே சிங்கள மக்களும் வாழ்ந்திருத்தல் வேண்டும்.மக்கள் இப்படியாக நாடெங்கும் பரவிக் கலந்து வாழ்ந்து கொண்டிருந்த போதிலும்,அரசியல் விஷயங்களுக்காக,வட பகுதியிற பெருமபான்மையினராய் திகழ்ந்த தமிழர் தென்பகுதியில் பெரும்பான்மையினராய்த் திகழ்ந்த சிங்களவர்- என இரு பிரிவினராக பகுக்கப்பட்டார்கள்.தமது ஆடசிச் சௌகரியத்தை மட்டுமே கருதிய பிரிட்டிஷார் சிந்தனைக் குறைவான முறையில் நாடு முழுவதையும் ஒரே குடியேற்ற நாட்டு அரசாங்கத்தின் கழ் கொண்டு வந்து பல நூற்றாண்டுகளாக இரு தேசிய இனங்களாக இருந்த பாகுபாட்டினை ஒழித்துவிட்டார்கள் ஆயினும், இவ்விரு தேசிய இனங்களும் இயற்கையாக கலந்து ஒன்றாகி விடவில்லை. ஆயினும் மக்களுள் பெரும்பகுதியினர் வெவ்வேறான இரண்டு மொழிகளையே பேசுபவராக, வெவ்வேறு நிலபபகுதிகளுள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

நமது மக்களின் அரசியல் இலட்சியத்தை அடைவதற்கு கட்டுப்பாடான முறையில் வேலை செய்வது அத்தியாவசியமாகும்.ஆனபடியால், தமிழ்பேசும் மக்களின் விடுதலையைக்காண்பதற்கு விரும்புபவர்களாய்,நமது மக்களின் எதிர்காலத்தில் நம்பிக்கை உள்ளவர்களாய் உளள உண்மை ஊழியர்களை ஒன்று சேர்த்து ஒரு ஸ்தாபனம நிறுவுதல் வேண்டும்.

நாம் முயன்று இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழி காணுதல் வேண்டும். அவ்வழிதான் என்ன? கூடுதலான பிரதிநிதித்துவம் கோரினோம். அது கிட்டவில்லை. வேறோர பரிகாரம் தேடியாக வேண்டும். இதற்காக பல மொழிகளைப் பேசும் மக்கள் வாழுகின்ற பிறநாடுகளைப் பார்ப்போம். இலங்கையில் இருப்பது போலவே அந்நாடுகளிலும் பல்வேறு மொழிகளைப் பேசும் இனம ஒவவொன்றும் தத்தம் உரிமைகளை கவனமாகப் பேணி வந்தன. சிறிய மொழிவாரி இனங்கள்,பெரிய மொழிவாரி இனங்களால் விழுங்கப் படாமல் தங்களைப பாதுகாத்துக் கொண்டன. இவ் விதம் மொழி வாரி இனங்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் யுத்தத்தில் முடிந்து பெரிய தேசிய இனங்களும் மோதிக் கொளள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று மொழி வாரியாகப் பரிக்கப்பட்ட பூரண சுதந்திரஅரசுகளைஅமைப்பது. இதிலும் பார்க்க தீவிரம் குறைந்ததான மற்றைய வழி மொழி வாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து அவற்றை இணைக்கும் ஒரு மத்திய அரசாங்கத்தை உடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே: இவ்விரு முறைகளையும் கையாளுவதற்கு வெவ்வேறு மொழி பேசும் இனங்கள் பிரிக்கப் படக்கூடிய பிரதேசங்களில் வாழுதல் வேண்டும். சமஷ்டி அரசியல் ஆனது உலகிற் பல பாகங்களிலும் இவ்வித பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்திருக்கிறது. பிரெஞ்சு- ஆங்கில மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட கனடா தேசமும் பலவாய, ஜெர்மன், பிரெஞ்சு-இத்தாலிய சுயாட்சி மாகாணங்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து தேசமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ரஷ்யா தேசத்திலும் சுயாட்சி கொண்ட மொழிவாரி மாகாணங்களே அமைக்கப்பட்டுள்ளன. அங்கே ஒரு தனியானப்ரதேசத்தில் வாழும் ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் ஒரு தனித் தேசிய இனத்தினராகக் கருதப்படுகின்றனர். இந்தியாவிலும், இந்தியத் தேசியக் காங்கிரசும் இந்திய அரசாங்கமும் மொழிவாரி மாகாணங்களை அமைக்க வேண்டும் என்றகொள்கையை ஏற்றுக் கொண்டு அப்படியே அமைத்தும் வருகின்றார்கள். தனி ஆந்திர மாகாணம் ஒன்று உருவாகின்றது. கன்னடர் தமக்கொரு மாகாணம் வேண்டும் எனறு கிளர்ச்சி செய்கின்றனர். இவையெல்லாம் ஒவ்வொரு மொழிவாரி இனமும் தன்னைத் தானே பாதுகாக்க விரும்பும் இயற்கை உணர்ச்சியின்பயனாக ஏற்பட்டவையேஆகும்.

### சமஷ்டி

யாம் கோருவது இது தான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும், ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள- சமஷ்டி அரசு- இலங்கையில்ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம் பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமேயானால் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாக இருக்கிறது. தமிழ் பேசும் பிரதேசங்களை இலகுவாகப் பிரித்துவிடலாம். இடையிடையே இரு மொழிகளைப் பேசும் மக்களும் கலந்து வாழும் பிரதேசங்களும் உண்டு. ஆனால் இதைக் காரணமாகக் கொண்டு ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களை சுயாட்சி மாகாணங்களாக வகுபபதற்கு தடை ஏற்படக்கூடாது. சமஷ்டி அரசியலால் ஒருவரும் நஷ்டமடையப் போவதில்லை. நிச்சயமாகச் சிங்கள மக்கள் நஷ்டமடையவே மாட்டார்கள். ஏனென்றால் இது பெரும்பான்மையோருடைய பிரதி நிதித்துவத்தைக் குறைத்து சிறுபான்மையோருக்கு கூடுதலான பரதிநிதித்துவம அளிக்கும் திட்டத்தைப் போன்றதன்று. ஆதலால் சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்ப வேண்டிய ஓர் இலட்சியமாகும்.

சுயாட்சித் தமிழரசை நிறுவ வேண்டுமென்று யாம் கோருவதற்குப பல காரணங்களுண்டு. முஸ்லிம்கள், தமிழர்களாகிய தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் இப் பொழுதே தாங்கள்-தாழ்ந்தவர்கள்-என்ற மனப்பான்மையைப்பெற்று வருகிறார்கள். ஒரு மனிதனின் பூரணமான மனோவிருத்திக்கு அவன் 'தானிருக்கும் நாடு தன்னுடையதே' என்றும் 'நாட்டின் அரசாங்கமும் தனதே' என்றும் கருதவேண்டியது அவசியமாகும். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களிடையே இன்று இவ்வுணர்ச்சி இல்லாதிருக்கின்றது. அவர்கள், தங்கள் பிரதேசங்களை தாங்களே ஆளுவதன்மூலம், அவ் அரசாங்கம் தங்களுடையதே என்று கருதுவதற்கு உரிமை இருக்க வேண்டும். இன்று கூடத்தமிழ் பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும்; சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ்பேசும் மக்களுக்குமிடையே இவ்வுணர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு வேற்றுமை இருப்பதைக் காணலாம். சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள்,தங்களுடைய எதிர் காலத்தைப்பற்றி நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால்,தமிழ் பிரதேசங்களில் வசிப்பவரிடையே சுதந்திர உணர்ச்சி இன்னும் நிலவுகிறது. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுதந்திர அரசு வேண்டுமென்ற இந்த இயக்கம்கூட, தமிழ்பேசும் பகுதிகளில் வசிக்கும் மக்களாலும்,அப்பகுதிகளுடன் இன்னும் தொடர்புடையவர்களாலுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத் தமிழர்கள் இத் திட்டத்தை ஆதரிக்கும்அளவுக்கு அங்குள்ள முஸ்லிம்மக்களும் இதை வரவேற்கின்றனர். கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ் அரசின் பகுதியாக்க வேண்டுமென்றால், தமிழ் பேசும் அவ்விரு சாகியத்தாரும் ஒன்று சேரவேண்டும். ஆனால், எங்களுடைய இயக்கம் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லிம்களுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது. அவாகளுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர் மானக்கவேண்டும். தமிழ் மாகாணங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகள் இந்நாட்டில் மிகவும் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன.

இலங்கையின் பரப்பில் 30 விகிதத்தையும்; மொத்த சனத்தொகை 10விகிதத்தையும் இம்மாகாணங்கள் கொண்டிருக்கின்றனர். இவை நன்றாக அபிவிருத்தி செய்யப்படக் கூடியன.போதிய நீர்ப்பாசன வசதிகளுடன் -சமதரையுள்ள இப் பிரதேசங்கள் தமிழ்பேசும் மக்களுடைய அரசாங்கத்தினாலன்றிச் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப் படமாட்டா.சிங்கள அரசாங்கத்தினால் இப்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டால்,அங்கு சிங்கள மக்கள் குடியேற்றப் படுவார்கள் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. கல்லோயா அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் என்ன நடைபெற்று வருகிறதென்பதை அங்குள்ள மக்கள் இப்பொழுதே உணர்ந்துவிட்டார்கள்.

### குறைகளை நிவர்த்தி செய்தல்

எங்களுடைய ஒரேயொரு நோக்கம், ஐக்கிய இலங்கை சமஷ்டியின் அங்கமாக, ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும். செய்ய வேண்டிய வேலை எவ்வளவு கஷ்டமானதென்பதை யாமுணர்ந்தேயிருக்கின்றோம். ஆயினும் அப்பணியைச் செய்து முடிக்க எம்மால் இயலும். அதைச் செய்தே தீர வேண்டும். எமக்கு சாதகமாகவும் பாதகமாகவும் பல விஷயங்கள் உள்ளன. யான் முன்குறிப்பிட்டதைப் போல எமது மக்கள் தம் எதிர் காலததைப் பற்றிக் கொண்டிருக்கும். ''உறுதியான அரசியற் கொள்கையே' எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். யாம் சிறந்த முறையில் நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால் எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்துக்கு காரணமாயிருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும். ஐரிஸ் தேசியவாதிகளைப் போல சுதந்திரத் தமிழ் அரசு நிறுவப்படும்வரை "பதவி ஏற்கவே மாட்டோம்" என்று வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழியர்களே எமது கட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும் பேச்சில் ஒரு நோக்கமுமாக யாம் இருத்தலாகாது.

செல்வத்திற் குறைந்த எங்களுக்கு வலிமை பொருந்திய நண்பர்களும் இல்லை. நேர்மையையும்- மன உறுதியையும்- இலட்சியத் துய்மையையுமே யாங்கள் ஆயுதங்களாகக் கொள்ள வேண்டும். இந்திய விடுதலை- இப்படியான தார்மீக சக்திகளினாலேயே பெறப்பட்டது. எமது விடுதலை- வெளிச்சக்திகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. யாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமானால், நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து அதைத் தூய்மைபெறச் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப் படுவதாகக் கருதுகின்றனர். யாம் ஒருவருக்குக் கொடுமை செய்தால் தர்ம நீதியின்படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வார். தமிழ் 'மக்கள் அரசியற் சுதந்திரம் பெற வேண்டுமேயானால் தம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்.

மலைநாட்டில் வாழும் தமிழ் தொழிலாளர்களுடைய நிலைமையானது இங்கு கூறிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலும் பார்க்கக் கேவலமானதாய் இருக்கின்றது. அவர்கள் அரசியலில் தீண்டாதவர்களாய் விட்டார்கள். அவர்களுக்குப் பிரஜாவுரிமை இல்லாமலிருப்பது மாத்திரமன்றி தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகளாகவுமிருக்கின்றாரகள். ஏனைய தமிழ் பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னலைத் தங்களுக்கு வந்ததாகவே கருதுதல் வேண்டும். அவர்கள் உதவிக்கு எதிர்பார்ப்பது இந்தியாவையல்ல; சுதந்திரம் விரும்பும் இலங்கை வாழ் மக்களிடமிருந்தே அவ்வுதவி வருதல் வேண்டும். இவ்விரண்டு விஷயங்களும்- நீங்கள் ஆரம்பிக்க வந்திருக்கும் இக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் இடம்பெறுதல் வேண்டும்.□

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சி.க செந்திவேல்ஆக்கிய 'வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்' நூல் வெளியீடும் கருததுரையும் இன்று பி.ப 4 மணிக்கு சஙகானை நிகரவைரவர் ஆலய அருகாமையில் உள்ள மண்டபத்தில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அறிமுகவுரையை 'தாயகம்' பிரதமஆசிரியர் க.தணிகாசலம் நிகழ்த்தவுள்ளார். (உ)

## விடைத்தாள் திருத்தும் பணி மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு இடம்பெறும் க.பொ.த.(உ/த) பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் முதலாம் மூன்றாம் கட்டப்பணிகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அடுத்தமாதம் 8ஆம் திகதி முதல் இப்பணி நடைபெறவுள்ளது.

விஞ்ஞான பாடம் தவிர்ந்த ஏனைய பாட விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

## மாவட்ட ஆணையாளர் நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உடுப்பிட்டி கோப்பாய் பிரதேசங்களை உள்ளடக்கிய பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க மாவட்ட ஆணையாளராக பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் இலங்கைச் சாரணசங்க தலைமைக் காரியாலயத்தாலநியமிக்கப்பட்டுள்ளார்.(உ-52)

## விழிப்புணர்வுப் பயிற்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சத்திய சாயி பாபா 'சாயிமந்திர்' நிலையத்தில் இளைஞர்களுக்கான தலைமைத்துவ விழிப்புணர்வுப் பயிற்சி நெறி அண்மையில் நடத்தப்பட்டது.

இத் தலைமைத்துவ விழிப்புணர்ச்சிப் பயிற்சி நெறியிலே வைத்திய கலாநிதிகளான எஸ். சிவகோணேசன்,எஸ். சிவராஜா, எஸ். கணேசகுமார் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினார்கள்.

பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 35 இளைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

மேலும் 50 இளைஞர்களுக்கு விரைவில் இத்தலைமைத்துவ விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (உ-52)

# பேச்சுவார்த்தையை மேலும் தொடர்வதற்கு புலிகளின் பலம் இன்னமும் அதிகரிக்க வேண்டும்

## நீதி,நிர்வாகப் பொறுப்பாளர் பரா உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ மக்களுக்கு நிரந்தரமான தீர்வொன்று ஏற்பட வேண்டுமானால், விடுதலைப் புலிகள் பலம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ நீதி,நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

யாழ்.வணிகர் கழகத்தில் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பான கருத்தரங்கொன்று நேற்று நடை பெற்றது.

இக் கருத்தரங்கில் உரையாற்றும் போதே பரா இதனைக் குறிப்பிட்டார்.அவர் மேலும் பேசுகையில் விடுதலைப் புலிகள் இன்று எவராலும் வெற்றி கொள்ள முடியாதவாறு பலம் மிக்கவர்களாக உள்ளனர்.இந் நிலையில் போருக்கென இலங்கை அரசுக்கு உதவுவது பயனற்ற செயலென சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

இதனால் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் எம்மைப் பேச்சுக்கு அழைத்ததற்கான பலத்தைத் தந்தவர்கள் மக்களே.

இந்நிலையில் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு எமது பலம் இன்னமும் அதிகரிக்க வேண்டும் இதற்காக அரசியல் பொருளாதார இராணுவ ரீதியிலான பலத்தினை மக்களிடம் இருந்தே எதிர்பார்க்கின்றோம்.இதன் அடிப்படையிலேயே வரி உட்பட சகல தேவைகளையும் மக்களிடம் இருந்தே பெற்று வருகின்றோம்.

பல இழப்புக்கள் மத்தியிலும் இருபது ஆண்டுகளாக போரின் பளுவைச் சுமந்த மக்களே நாம் சுயாட்சியை உருவாக்கும் வரை உதவ வேண்டும்.மக்கள் பலவீனமாக இருக்கும் போது அம் மக்களுக்கான போராட்டம் பலமாக இருக்க முடியாது.மக்களில் பல வீனத்தை ஏற்படுத்தக் கூடிய கொலை, கொள்ளை, பாலியற் சீர்கேடுகள் போன்ற சமூக சீர் கேடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்க மார்ட்டோம் என்றும் பாரா மேலும் தெரிவித்தார். (இ-4)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பில் மோசடி

## இடம்பெறுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு கப்பல்களில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக அவதானமாக இருக்கும்படி துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பல்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக்கப்பல்களில் வேலைவாய்ப்பை பெற்றுத் தரக்கூடிய சட்டரீதியான அங்கீகாரத்தினை துறைமுக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கப்பல் பணிப்பாளர் அலுவலகம் மாத்திரமே பெற்றுள்ளது.

இவ்வாறு போலிச் சான்றுகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கப்பல்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுச் சென்றுள்ள சுமார் 500 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே துறைமுக அபிவிருத்தி அமைச்சின் கப்பல் பணிப்பாளர் அலுவலகத்தின் அனுமதியின்றி வெளிநாட்டுக் கப்பல்களில் வேலை பார்ப்பது சட்டவிரோதமானது.

போலி ஆவணங்களைத் தயாரித்து வேலை பெற்றுத் தருவதாகக் கூறும் நபர்களை நம்ப வேண்டாம் எனவும் பொதுமக்களை மேலும் கப்பல் துறை அமைச்சு கேட்டுள்ளது. (உ-10)

# யுத்தம் இனி வேண்டாம் பேச்சை ஆரம்பியுங்கள்

## யாழ். ஆயர் அரசு-புலிகளுக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

''யுத்தம் இனிமேல் என்றுமே வேண்டாம். பேசவதைச் செயல் படுத்துங்கள். பேச்சுவார்த்தையைத் தொடருங்கள்'' என்று தலைப்பிட்டு அவசர கடிதம் ஒன்றினை யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அரசுமற்றும் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடங்களுக்கு அவசர கடிதங்களை அனுப்பி வைத்திருக்கின்றார்.

மேற்கண்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

பேச்சுவார்த்தை சுமுகமாக நடை பெற்றுக் கொண்டிருந்த வேளை பேச்சினை புலிகள் தற்போது இடை நிறுத்தியிருப்பது ஒரு அபாய அறிவிப்பாகும்.

அரசின் போக்கில் அதிருப்தி உற்று இதுவரை இணக்கம் கண்டவற்றை அமுலாக்கத் தவறியமை இயல்பு நிலை ஏற்படுவதில் தாமதம் காட்டியமை, வாஷிங்டன் கூட்டத்திற்கு அழைக்காமல் விட்டமை போன்ற பல காரணங்களைக் காட்டி சமாதானப் பேச்சுக்களை புலிகள் இடை நிறுத்தியுள்ளனர். இச் செய்தி சமாதானத்தை விரும்பிய தமிழ் மக்கள் அனைவரதும் மனங்களில் குழப்பத்தையும், வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தை ஒரு இருவழிச் செயற்பாடு. இரு தரப்பினரும் மனம் திறந்து இதய சுத்தியோடு தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர் காலத்தினை கருத்திற் கொண்டு பேச்சுக்களை நடத்த வேண்டும். பேசுவதை இரு தரப்பினரும் உடன்நடைமுறைப்படுத்தல் வேண்டும். செயற்பாடு இன்றி தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பதனால் எந்தப் பயனும் இல்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு கடந்த பின்னரும் பல அடிப்படை விடயங்களிலும் இயல்பு வாழ்விலும் முன்னேற்றமும் மாறுதலும் ஏற்படாமலிருப்பது தமிழ் மக்கள் மனதுகளில் ஏற்கனவே விரக்தியையும் குழப்ப நிலையையும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லாத் தன்மையையுமே ஏற்படுத்தியுள்ளது. இது இறுதியில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட இரு தரப்பினருக்குமிடையே ஐயப்பாட்டையும் நம்பிக்கையில்லாத தன்மையையுமே தோற்றுவிக்கும்.



இந்த நிலையில் யுத்தம் இனி மேல் என்றுமே வேண்டாம். பேசுவதைச் செயற்படுத்துங்கள். பேச்சுவார்த்தையைத் தொடருங்கள் என்ற வேண்டுகோளை அரசுக்கும் புலிகளுக்கும் இவ்வேளையில் அவசரமாக தமிழ் மக்கள் அனைவர் பேராலும் விடுக்க விரும்புகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# மிருசுவில் ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதி இல்லை

## பொதுமக்கள் அவதி

(கொடிகாமம்)

மிருசுவில் அரச வைத்திய சாலையில் பிரசவ விடுதி இன்மையால் இப்பகுதி மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

மீளக் குடியமர்ந்துள்ள கொடிகாமம், மிருசுவில், விடத்தற்பளை, கெற்பேலி, பாலாவி, கச்சாய், அல்லாரைப்பகுதி மக்கள் இவ்வைத்தியசாலையை நாடி வருகின்றனர்.

இருப்பினும் இங்கு பிரசவ விடுதி அமைக்கப்படாமை பெரும் குறைபாடாகவே கருதப்படுகின்றது.

தினமும் நூற்றுக்கணக்கானோருக்கு இவ்வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-40)



இடைக்காடு மகாவித்தியாலய பவள விழாவில் கலந்து கொண்ட பேராசிரியர்களான எஸ்.சிவஞானசுந்தரம், எஸ்.சின்னத்தம்பி இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் மற்றும் அதிபர் எஸ்.சித்திரவடிவேல் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

படம்:- என்.எஸ்.திருச்செல்வம்

# எழுத்தறிவு மிக்கவர்கள் இலங்கையிலேயே அதிகம்

## ஐ.நா. பொருளாதார சமூக ஆ.கு.அறிக்கை

(கொழும்பு)

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆகிய நாடுகளில் எழுத்தறிவு கொண்டவர்கள் அதிகமாக உள்ள நாடு என்ற பெருமையை இலங்கை தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமூக ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இது விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 97 வீதமான இளைய தலைமுறையினர் எழுத வாசிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

15 வயதிற்கு குறைவான சிறுவர்களில் 92 சதவீதமானவர்களுக்கு எழுதும் மற்றும் வாசிக்கும் வல்லமைகள் உள்ளன.

15 க்கும் 24 வயதிற்குமுட்பட்டவர்களில் 97 சதவீதமானோர் எழுத வாசிக்க தெரிந்தவர்களாக உள்ளதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-8)

# வெசாக்கை ஒட்டி விரிவான ஏற்பாடு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இவ்வாண்டு நியமிக்கப்பட்டுள்ள தேசிய வெசாக் குழுவினால் எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின்படி, விகாரைகள், வைத்தியசாலைகள் மற்றும் பொது இடங்களில் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், வசதியற்ற ஏழைகளுக்கு அன்னதானங்களை வழங்கவும், மிருகங்களை தொல்லைப்படுத்தாது வாழவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களை விட இவ்வாண்டு மிகச் சிறப்பாக வெசாக்கைக் கொண்டாடுவதுடன் மத ஹ கொண்டுள்ளதாக இப்பண்டிகை அமையும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-10)

# நாடளாவிய ரீதியில் 11 வேலை வாய்ப்பு நிலையங்கள் அமைப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 17 வேலை வாய்ப்பு நிலையங்களை அமைக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 11 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தொழிலமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

11 வது வேலைவாய்ப்பு நிலையத்தை அண்மையில் திறந்து வைத்துப் பேசிய போதே மஹிந்த சமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஏனைய 6 தொழில் நிலையங்களும் விரைவில் அமைக்கப்படும். அவை அமைக்கப்பட்டதும் இனமத பேதமின்றி அனைவருக்கும் அவரவர் கல்வித் தகமைக்கேற்ப வேலை வாயப்புக்கள் வழங்கப் படும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மத்தியவீதி புனித சூசையப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 22ஆம் திகதி பங்குத்தந்தை அருட்திரு ஞானப் பிரகாசம் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறவுள்ளது. (உ)



பருத்தித்துறை இலங்கை வங்கி ஊழியர்களால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மனநோயாளர்களின் பொழுதுபோக்குக் கருதி அன்பளிப்பாக வழங்கப்பட்ட தையல் இயந்திரத்தை வங்கி முகாமையாளர் எஸ்.தேவராஜா மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளையிடம் கையளிக்கிறார்.

படம் :- என்.எஸ்.திருச்செல்வம்


# சுபானு வருடம்

### சனி,குரு,ராகு,கேது மாற்றங்கள்

**வாக்கிய பஞ்சாங்கப்படி 22.5.2003 இல சனி இடப ராசியில் இருந்து மிதுனத்திற்கு இடம்பெயர்ந்து மிதுனராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சரிக்கும். 23.07 2003 இல வியாழன் கற்கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு இடம்பெயர்ந்து ஒரு வருடத்துக்கு சிங்க ராசியில் சஞ்சாரம் செய்யும். 14.08.2003 இல் ராகு, கேதுக்கள் இடப விருச்சிக ராசிகளில் இருந்து முறையே மேட ,துலாராசிகளுக்கு மாற்றம் அடைந்து ஒன்றரை வருடம் வரை சஞ்சரிக்கும். இலங்கையில் இக்கிரகங்களின் மாற்றங்களால் பொருளாதார, இராணுவ, அரசியல், சமூகமாற்றங்கள் நடை பெறும்.**

**இம்மாற்றங்கள் பன்னிரு ராசிக்காரர்களுக்கும் ஏற்படுத்தும் பலா பலன்களைப்பார்ப்போம்.**

## மீனம்



(பூரட்டாதி 4ஆம் பாதம் உத்திரட்டாதி,ரேவதி)

அன்புள்ள மீன ராசி அன்பர்களே!

மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட உஙகளுக்கு குருபகவான் 30.7.2003 முடிய 5-ல் உச்சம் பெற்று சஞ்சரிப்பதும் 28.8.2003 முடிய ராகு 3-ல சஞ்சரிப்பதும் அனுகூலமான அமைப்பாகும்.உங்களுக்கு அஷ்த்தாஷ்டம் சனி நடைபெறுவதால் அசையாச்சொத்து வகையில் வீண் செலவுகளும் சுகபோக வாழ்க்கை ஏற்பட இடையூறுகளையும் உண்டாக்கும்.குரு,ராகு சஞ்சாரத்தால் ஆகஸ்ட் மாதம் வரை ஒரளவுக்கு ஏற்றமான பலனை அடைவீர்கள். சுப காரியங்களுக்கான முயற்சிகளை ஆண்டு தொடக்கத்தில் எடுத்தால் ஓரளவுக்கு சாதகபலனை அடைவீர்கள். 28.8.2003 முதல்2-ல ராகு 8-ல் கேது சஞ்சரிக்க இருப்பதும் 30.7 2003 முதல் குரு 6-ல் சஞ்சரிக்க இருப்பதும் தொழில் பொருளாதார ரீதியாக சங்கடங்களை எதிர் கொள்ள வைக்கும். ஆண்டு பிற்பகுதியில் எதிலும் கவனமாக இருப்பதன் மூலம் கெடுதிகள் விலகி அனுகூலம் உண்டாகும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இது வரை ஏற்பட்ட கஷ்டங்கள் யாவும் விலகும். குடும்பத்தில் மற்றவர்கள் ஆரோக்கியமாக காணப்படுவர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். பொருளாதார ரீதியில் வரவுகள் சரளமாக இருக்கும். ஆடிமாதத்திற்கு பிறகு சீரான நிலை ஏற்படும்.குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும். செய்யும் தொழில் வியாபாரம் ரீதியாக அரசாங்க வழியில் சில சோதனைகளுக்காக அலைச்சல்,டென்ஷன் ஏற்படும்.வெளியூர் பயணங்களால் அதிக நன்மைகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் தேவையான இடமாறுதலும் ஏற்பட்டு மேலதிகாரிகளின் அபிமானத்தை பெற முடியும். சுபகாரியங்கள் மளமளவென்று நடைபெற்று சுபம் உண்டாகும்.மாணவர்கள் கல்வியில் வெற்றியும் அதிக மதிப்பெண்களும் பெற்று சிறப்படைவார்கள்.புத்திர பாக்கியம் உண்டாகும். கடன்கள் யாவும் படிப்படியாக பைசலாகும். அரசியல்வாதிகளுக்கு பெருமை, புகழ்,கௌரவம் கூடும். கொடுக்கல் வாங்கல் சிறப்பான நன்மையினைக் கொடுக்கும்.கலைஞர்கள் புகழ் பெற்று அதிக பட வாய்ப்புகளைப் பெறுவார்கள். விவசாயிகளுக்கு மகசூல் அகிகரிக்கும். விளை பொருள் இலாபம் தரும்.

உடல் நிலை: தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். கடந்த காலத்தில் இருந்த மருத்துவச்செலவு, ஆரோக்கியக்குறைவு கதிரவனைக் கண்ட பனி போல் மறையும்.மன மகிழ்ச்சியும்,சந்தோஷமும் உண்டாகும. குடும்பத்தில் மற்றவர்கள் உடல் நலத்துடன உற்சாகமாகக் காணப்படுவார்கள். புத்திரர்களால் பெருமை அடையும் காலமாகும்.ஆடிமாதத்திற்கு பிறகு சிற்சில ஜல தொடர்புடைய உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். ஆனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.கவலையின்றி நிம்மதி ஏற்படும்.

குடும்பம் குழந்தைகள்: உங்கள் குடும்பத்தில் கணவன் மனைவி இடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் நிலவும். பொருளாதார நிலையில் அதிக ஏற்றமும் முன்னேற்றமும் காணப்படும். குழந்தைகளுக்கு இருந்த இடையூறுகள் விலகி வாழ்வில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படும். ஆடை ஆபரணம், வீடு மனை, வண்டி,வாகன சேர்கையும் உண்டாகும். எடுக்கும் காரியங்கள் யாவும் சற்று அலைச்சல்,டென்ஷனைத் தந்தாலும் வெற்றியைக்கொடுக்கும். உங்கள் குடும்பத்தில் சுபீட்சமான நிலை உண்டாகும்.உறவினர்கள் வருகையால் பல புதிய சுப முயற்சிகள் உடனடியாக நடைபெற்று சுபமுண்டாகும். வெளிவட்டார பழக்கம நன்மை தரும்.

உத்தியோகநிலை: உத்தியோகததில் திடீர் என்று எதிர் பாராத பதவி உயர்வும் ஊதிய உயர்வும் ஏற்பட்டு மன மகிழ்வினை ஏற்படுத்தி விடும்.இதனால் அனேக அனுகூலப் பலன்களை பெற்றிடுவீர்கள். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் சக ஊழியர்களின் உதவியும் எப்போதும் கிடைக்கும். வெளியூர் பயணங்கள் மூலம் அலைச்சல், டென்சன் ஏற்பட்டாலும் அதுவும் நன்மையானதாக இருக்கும. உங்கள் கடன்கள் பைசலாகும். கவலைகள் மறைந்து ஏற்றம் உண்டாகும். ஆடிமாதத்திற்குப்பிறகு சறிது வேலைப்பளு கூடும்.பொறுப்பும் அதிகரிக்கும்.

தொழில்வியாபாரம்:திடீர்திடீர் என்று பொருள் வரவு உண்டாகும். போட்டி பொறாமைகள் குறையும். அலைச்சல,டென்சன் தொழில் வியாபார ரீதியாக ஏற்பட்டாலும் அதிலும் நன்மையான பலன்களே உண்டாகும். பெரிய முதலீடுகளையும் ஈடுபடுத்தி படிப்படியான வளர்ச்சி காணக் கூடிய காலமாகும். சேமிப்பு பெருகும். வெளியூர் வெளிநாடு செல்லும் வியாபாரிகள் அலைச்சலை,டென்சனைச் சந்தித்தாலும் எண்ணிப் பார்க்க முடியாத அளவு நன்மைகளை அடைவார்கள். கமிஷன் ஏஜென்ஸி காண்டிராக்ட் போன்றவை சிறப்பான இலாபத்தினை ஏற்படுத்தும் கூட்டுத் தொழிலாகும்.

பெண்களுக்கு:கடந்த காலங்களில் தடைப்பட்ட திருமணங்கள் யாவும் தற்போது நடைபெறும்.நீண்ட நாட்களாக புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் ஏற்படும். கணவன் மனைவியிடையே சிறசில கருத்து வேறுபாடுகள் தோன்றும்.ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து போவது உத்தமம்.வேலை தேடும் பெண்களுக்கு நல்ல ஊதியத்துடன் வேலை கிட்டும்.தாய்வழியில் நலங்கள் சேரும்.பொன்,பொருள், ஆடை,ஆபரணம் சேரும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு: உங்கள் வாழ்வில் மறக்க முடியாத நல்ல சம்பவங்கள் நடைபெறும். கௌரவம் புகழ் கூடும். எதிர் பாராத பணவரவு உண்டாகி மனதில் பூரிப்பு ஏற்படும். புதிய முயற்சி பரிபூரண வெற்றியினை ஏற்படுத்தும். நீண்ட நாட்களாக பழகியவர்கள் விரோதம் பாராட்டுவார்கள். யார் தடுத்தாலும் உங்கள் வளர்ச்சியினை கட்டுப்படுத்த முடியாது.

கொடுக்கல்வாங்கல்:உங்களுக்கு மிகவும் யோகம் கொடுக்கும் காலமாகும்.நீண்ட நாட்களாக இருந்து வந்த கொடுக்கல் வாங்கல் வழக்கில் தீர்வு உண்டாகி வெற்றி தரும். பெரிய தொகைகளையும் எளிதாக கொடுத்து வாங்கும் அமைப்பும் அதன் மூலம் பெரியமனிதர்களின் அறிமுகத்தால் மேன்மேலும் உயரக்கூடிய உன்னதமான நிலை உருவாகும்.

விவசாயிகளுக்கு:நல்லவிளைச்சல இருககும்.நனசெய் பயிர்கள் மகசூலில் சாதனையை ஏற்படுத்தும். கறுப்பு நிற தானியங்கள் எண்ணை வித்துக்களின் மூலம் அதிக விளைச்சல் பெற்று ஏற்றமான பலன்கள் பெற முடியும். காலத்திற்கு மழை பொழிவும்,அரசாங்கத்தின் மூலம் அனுகூலமும் உதவியும் மான்ய உதவிகளும் கிட்டும்.புதிய நவீன டிராக்டர் போன்ற கருவிகள் வாங்கும் யோகம் அமையும்.

மாணவ மாணவிபருக்கு: தேர்வில் வெற்றியும் சிலர் மேற்படிப்புக்காக மருத்துவம்,பொருளியல் போன்றவற்றில் அமையும்.யோகமும் கிடைக்கும்.பெற்றவர்களை பெருமைப்படுத்துவீர்கள். சிலருக்கு கணனி தேர்ச்சியல் சாதனை படைப்பார்கள். மந்த நிலை, சோர்வு ஏற்படாது. நண்பர்களுடன் அலைச்சல்,டென்ஷனை கட்டுப்படுத்தினாலேபோதுமவெற்றி நிச்சயம்

கலைஞர்களுக்கு: வெளியூர் பயணங்கள் சாதகமான பலனை ஏற்படுத்தும்.புதிய ஒப்பந்தங்கள் மூலம் நல்ல வருமானம் அமையும்.ரசிகர்களின் ஆதரவுகள் பெருகும்.புதிய படவாய்ப்புகள் தேடிவரும். உங்களின் திறமை முழுமையாக வெளிப்படும். அரசு மூலம் கௌரவிக்கப் படுவீர்கள். சற்று அலைச்சல், டென்ஷன் ஏற்பட்டாலும் உங்கள் வளர்ச்சி மேலோங்கும்.

### 14.4.2003முதல் 29.7.2003வரை

தைரியஸ்தானமான 3-ல் ராகு5-ல்குரு சஞ்சிரிப்பதால் உங்கள் செல்வம்

# புத்தாண்டுப்பலன்

செல்வாக்கு உயரும் காலம் ஆகும். சுபீட்சமான நிலையில் குடும்பம் இருக்கும்.அரசு வழியில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். சிலருக்கு விரும்பிய இடத்துக்கு மாறுதலும் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் எதிர்பாராமல் கிடைப்பதால் சந்தோஷம் கொப்பளிக்கும். கணவன் மனைவி உறவுகளில் நல்ல ஒற்றுமையாகக் காணப்படும். புத்திரர்களின் மூலம் அனுகூலமான பலன்கள் சுபச் செலவுகள் உண்டாகி மன மகிழ்ச்சியினை ஏற்படுத்தும். செய்கின்ற தொழிலும் வியாபாரமும் ஏற்றமும் முன்னேற்றமும் இலாபமும் கொடுத்து வளர்ச்சி பெறும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளுடன் ஒற்றுமையும் இலாபமும் உண்டாகும்.கொடுக்கல் வாங்கல் சிறப்பினை ஏற்படுத்தும். வெளிவட்டார பழக்கமும் உறவினர்களின் வருகையும் நண்பர்களின் நட்பும் நன்மையும் உதவியினையும் ஏற்படுத்தும் கலைஞர்கள் வெளியூர் பயணங்களால் அதிகமான அனுகூலப்பலனைபெறுவார்கள். அரசியல் வாதிகளுக்கு பெரியோர்களின ஆசியும்தொண்டர்களின் அன்பும் ஆதரவும் கிட்டும்.விவசாயிகள்அதிக விளைச்சலைப் பெறுவார்கள். கடன்கள் மறையும்.

### 30.7.2003முதல் 28.8.2003 வரை

சுபஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதும் 6-ல் குரு சஞ்சரிப்பதும் அலைச்சலைத் தரும் அமைப்பாகும். நீஙகள் எடுக்கும் முயற்சியில எதிர்ப்புகள் அதிகரிக்கும். உங்களுக்கு இக்காலத்தில் நன்மையும் தீமையும் கலந்த பலனே காணப்படும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமாராகவே இருக்கும். மணமாகாத பெண்களுக்கு மணம் ஆகும் அமைப்பு சற்று தாமதித்து ஏற்படும. சிலருக்கு காதலும் கைகூடுவதில் சற்று தாமதித்து வெற்றி கொடுக்கும்.மங்கையர்களுக்கு குடும்பத்தில் சிற்சில குழப்பங்கள் ஏற்பட்டு சிறிது அலைச்சல் ஏற்பட்டாலும் ஓரளவு உறவினர்களால் சாதகபலனை அடைய முடியும். வேலை தேடுபவர்களுக்கு முதல் தாமதத்தினைக்கொடுத்து பின்புதான் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் மேல்அதிகாரிகளின் ஒத்துழைப்பும், அரவணைப்பும் மன ஆறுதலைக்கொடுக்கும்.தொழில் வியாபாரம் சுமாரான தனவரவைக் கொடுக்கும் பொருளாதார ரீதியாக வரவுகளில்தாமதம் ஏற்பட்டு கடன்கள் ஏற்பட்டு பின்பு அவை பைசலாகும். கொடுக்கல் வாங்கலில் நற்பலன்கள் ஏற்படும்.மாணவர்கள் மதிப் பெண்களை அதிகமாகப்பெற சற்றே கூடுதலாக உழைத்திட வேண்டியிருக்கும். விவசாயிகள் அதிக மகசூலைப்பெறுவதோடு கடன் தொல்லைகளில் இருந்து விடுபடுவார்கள்.அரசியலவாதிகளும் கலைஞர்களும் புகழ் பெறுவார்கள்.

### 29.8.2003 முதல் 26.10.2003 வரை

2ல் ராகு 6-ல் குரு 8-ல் கேது சஞ்சரிப்பதால் மண வாழ்வில் மகிழ்ச்சி குறையும். தொழில் உத்தியோக ரீதியாக நெருங்கியவர்களே பகைமை பாராட்டும் சூழ்நிலை உண்டாகும். உங்கள் தேக நிலையில் ஜல தொடர்புள்ளவையும் வயிற்றுக் கோளாறுகளும் ஏற்படும் மருத்துவச் செலவுகள் கூடும். குடும்பத்தில் புத்திரர், மனைவி வழியில் சற்று உடல் நலக்குறைவு ஏற்படும். பொருளாதார நிலையில் வரவுகளில் தடைதாமதம் உண்டாகி பற்றாககுறை ஏற்பட்டு கடன்கள் வாங்க வேண்டிய சுழ்நிலை ஏற்படும். கடன்கள் மூலம் நெருங்கியவர்களே பகைமை பாராட்டுவார்கள். குடும்பத்தில் கணவன் மனைவ் உறவில் திருப்தியான நிலை நிலவாது . அமைதிக் குறைவும் சந்தோஷக் குறைவும் ஏற்படும். உற்றார், உறவினர்,நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும்.தொழில் வியாபார ரீதியாகவும் உத்தியோக ரீதியாகவும் நெருங்கிய உடன் உறையும் ஊழியர்களே உங்களுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் சூழ்நிலை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் திருப்தியான நிலை நிலவாது. முன் ஜாமன் கொடுப்பதில் எச்சரிக்கையாகவே இருப்பது உத்தமம். அரசியல் வாதிகளுக்கு புகழும் கௌரவமும் குறைவுபடும். மாணவர்கள் கல்வியில் கவனமாக படித்தால் மட்டுமே அதிக மதிப்பெண்களை பெறமுடியும் விவசாயிகளுக்கு , விளைச்சல்குறையும்.

### 27.10.2003முதல் 4.1.2004 வரை

குரு,ராகுசதாகமற்று சஞ்சரித்தாலும்சனி வக்ரம் பெற்றிருப்பதால் பல நாட்களாக தடைப்பட்ட பண வரவு உண்டாகி சோதனைகள் குறையும்.உங்கள் தேக ஆரோக்கியம் படிப்படியாக நலமாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும. பொருளாதார வரவுகள் தாமதித்து கிடைக்கும்.நீண்டநாட்களாக தடைப்பட்டிருந்த தொகைகள் தற்போது வந்து சேரும். இவ்வளவு நாட்களாக இருந்த கடன் தொல்லைகள் குறையும்.செய்யும் தொழில் வியாபாரம் சுமாரான இலாபத்தினைக் கொடுக்கும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் படிப்படியான வளர்ச்சி உண்டு. தடைப்பட்ட சுப காரியங்கள் சற்று தாமதித்து நடைபெறும். சகோதரர்கள் ஒற்றுமையுடன் காணப்படுவார்கள்.குடும்பத்தில் பூர்வீக சொத்துக்களின் மேல் இருந்த செலவுகள் குறையும். உத்தியோக ரீதியாக பதவி உயரும். ஊதிய உயர்வும். சற்று தாமதித்து ஏற்படும். கணவன் மனைவி உறவு ஒற்றுமையுடன் காணப்படும். விவசாயிகள் நவீன கருவிகளை பயன் படுத்தி நல்ல விளைச்சலைப் பெறுவார்கள். கொடுக்கல் வாங்கல் சுமாரான சதாக பலனை கொடுத்திடும்.அரசியல்வாதிகளும் கலைஞர்களும் மக்கள் மத்தியில் சற்று புகழுடன் அமைவார்கள்.கமிஷன், ஏஜென்ஸி,காண்டிராக்ட் இவற்றின் மூலம் அனுகூலம் ஏற்படும்.

### 05.01.2004முதல் 27.03.2004 வரை

4-ல் சனி வக்ரம் பெற்று 6-ல் குரு வக்ரம்பெற்று சஞ்சரிப்பதால் எல்லாவகையிலும் ஏற்றங்கள் எற்படும்நேரமாகும். உங்களுக்கு இககாலத்தில் வெற்றி மேல் வெற்றி தரும காலமாகும் குடும்பத்தில் கணவன மனைவி உறவு அன்னியோன்னியமாக இருக்கும்.ஸ்திர சொத்து சேர்க்கை செரும் யோகம் உண்டாகும். பழைய கடன்கள் எல்லாம் பைசலாகி அமைதி ஏற்படும் சிலருக்கு பூமி,வீடு மனை, தோட்டம் வாங்கும் யோகமும் அமையப்பெற்று சந்தோஷம் அடைவார்கள். வெளிவட்டார பழக்கம் வெகு அற்புதமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் ரீதியாக சதகமான பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரிய முயற்சி நலமாக முடிந்து தடல் புடலாக நடைபெறும். சிலருக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். தொழில் வியாபாரம் கூட்டுத் தொழில் வியாபாரம் இவைகளில் இருந்த மந்தமான நிலைவிலகி சிறப்பான இலாபத்தினை கொடுக்கும். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் ஒத்துழைப்பினைப பெற்று அதன் மூலம் பதவி உயர்வும், நிலுவைத்தொகை பெற்று மகிழ்வார்கள். சிலர் குடும்பத்தோடு ஸ்தல யாத்திரை செல்வார்கள். மாணவர்களுக்கு வெற்றி மேல் வெற்றி பெறும் அமைப்பாகும். அரசியல் வாதிகளுக்கு புதியபொறுப்பான பதவிகள் அமைவதோடு புகழ், செல்வம் செல்வாக்கு உயரக் கூடிய காலமாகும். விவசாயிகள் நல்ல விளைச்சலைப்பெற்று கடன்களை தீர்ப்பார்கள்.

### 28.03.2004முதல் 12.04.2004 வரை

2-ல்ராகு 8-ல் கேது சஞ்சரித்தாலும் 6ல் உள்ள குரு வக்ரம் பெற்றிருப்பதால் தொழில் உத்தியோகரீதியாக உள்ள போட்டி பொறாமைகள விலகி ஏற்றமிகு பலன் உண்டாகும். உங்களின் ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.சில சமயம் ஜல தொடர்புள்ள சில உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் மற்றவர்கள் ஆரோக்கியமாக காணப்படுவார்கள். மருத்துவச் செலவுகள் குறையும். பொருளாதார ரீதியாக படிப்படியான ஏற்றத்தினை அடைவீர்கள். தொழிலும் வியாபாரமும் நன்றாக நடைபெற்றாலும் எதிர்பார்த்த அளவிற்கு இலாபம் உண்டாகாது.கமிஷன், ஏஜென்ஸி, காண்டிராக்ட் போன்றவைகளில் அதிக இலாபம் இல்லாவிட்டாலும் நஷ்டம் ஏற்பட வழியில்லை. வெளியூர் பயணங்களால் சுமாரான பலன்கள ஏற்படும். கடன்கள்யாவும் தாமதமாக விலகும். பெண்களுக்கு நினைத்த காரியம் நிறைவேற தாமதம் ஏற்படும். புதிய முயற்சிகளில் சற்று கவனம் தேவை. போட்டி பொறாமைகள் உத்தியோக ரீதியாக ஏற்பட்டவை யாவும் விலகும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்களையே பெறுவார்கள்.அரசியல் வாதிகளுக்கு சிற் சில போட்டிகள் ஏற்பட்டாலும் மதிப்பும் புகழும் கூடும். கலைஞர்களுக்கு புதிய பட வாய்ப்பில தாமத நிலை ஏற்படும்.

### நட்சத்திர பலன்

பூரட்டாதி 4-ம் பாதம்: உங்களுக்கு உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிற் சில சோதனைகள் ஏற்பட்டு மறையும். தொழில் உத்தியோக ரீதியாக அலைச்சல், டென்சனைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சில சமயங்களில் கணவன் மனைவி இடையில் கருத்து வேறுபாடு நிலவி மறையும். ஆனால் பொருள் வரவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கடன்கள் பைசலாகும். சிலருக்கு வண்டி, வாகனம அமையும் யோகமும் உண்டாகும்.

உத்திரட்டாதி: செய்யும்தொழிலும் வியாபாரமும் ஏற்றமான பலனைக் கொடுத்தாலும் அடிக்கடி வெளியூர் பயணங்கள் ஏற்பட்டு சற்று அலைச்சலைத்தரும். கணவன் மனைவி சற்று ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். உத்தியோக ரீதியாக உடன் ஊழியர்களிடம் வாதட வேண்டியிருப்பதால் டென்ஷன் அதிகரிக்கும். கூட்டுத்தொழில்,கூட்டுவியாபாரம் சுமாராக இலாபத்துடன் நடைபெறும். மாணவர்கள் கல்வியில் ஆர்வமுடன் ஈடுபட்டு ஆசிரியர்களின் பாராட்டுக்கும் மற்றவர்களின் பூரிப்பிற்கும் ஆளாவார்கள்.

ரேவதி: குடும்பத்தில் சுப முயற்சிகளில் ஈடுபட்டு நல்ல வரன் அமையப் பெற்று சுபம் கூடும். சிலருக்கு நீண்ட நாட்களாக வழக்குகளில் இழுபறி நிலைமை மாறி சாதகமான தீர்ப்பு உண்டாகும். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியமஅமையபபெறும். கொடுக்கல்வாங்கலின் மூலம் சாதகமான நிலையும் பெரிய மனிதர்களின் தொடர்பும் ஏற்படும். க்லைஞர்களுக்கு புதிய பட வாய்ப்புகளில் வரவேற்பும் தன வரவும்அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு நல்ல புகழ் பெருமை ஏற்படும்.

தோஷமும் பரிகாரமும்:அர்த்தாஷ்டம சனி நடைபெறுவதால் ஆஞ்சநேயா வழிபாடு சனி ப்ரீதி செய்வது அனுகூலத்தை உண்டாக்கும். 30.7.2003 முதல் குரு 6-ம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதால் தெட்சணாமூர்த்தி வழிபாடு செய்வது நல்லது.அது போல 28.8.2003 முதல் ராகு குடும்பஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரிக்கவுள்ளதால் துர்க்கை வழிபாடு செய்வதன் மூலம் குடும்பவாழ்வில் ஏற்றம் ஏற்படும். சோதனைகள் குறைந்து ஏற்றம் உண்டாகும்.

சுபம்

## நாவுக்கரசு நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்டுவருகின்ற அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை வரிசையில் இன்று சனிக்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## இன்று ஒரு தகவல்

### சூதாட்டம் மனநோயா?

ஒருவர் குதிரைப்பந்தயத்திற்குப் போனார். பணம் கட்டினார். தோற்றுப்போய் விட்டார். மீண்டும் போய்ப் பணம் கட்டினார் தோற்றுவிட்டார். மறுதடவையும் பணம் கட்டப் போனபோது அவரைத் தடுத்து, “ஏன்சார்... ஏற்கனவே விட்டது போதாதா? இன்னமும் இருக்கிறதை விட வேண்டுமா?” என்று கேட்டேன். “விட்டதையெல்லாம் மொத்தமாக எடுக்கவேண்டாமாசார்? அதற்காகத்தான் தொடர்ந்து பணம் கட்டுகிறேன்” என்றார் அவர். அவரைத் திருத்துவது மிகவும் கஷ்டம். இது ஒரு மனநோய்.

மனநோய்களில் பல வகை உண்டு. மனநோய்கள் பிரிவு அட்டவணையில் சூதாட்டம் என்பது அவதியுறும் நோய் என்கின்ற தலைப்பில் வருகிறது. சூதாட்டம் இரண்டு வகைப்படும் என்று உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். நண்பர்களோடு சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைவதற்காக ஈடுபடுவது ஒருவகை. பிரச்சினைகளை தீர்ப்பது ஓர் ஆர்வம். கேளிக்கைக்காகக் கொஞ்சம் விட்டுப்பிடிக்கிறது என்கிற மனிதனுடைய அடிமனதிலே உள்ள விபரீத பிணையச் சுபாவம். இவர்கள் அதற்குக் காரணம்.

இன்னொருவகை சூதாட்டத்தில் ஈடுபட்டு ஒரு கட்டாய நிலைமைக்கு ஆளாய்விடுவது செய்... ஈடுபடு என்று மனது ஒரு வெறித்தன்மையைத் தூண்டிக்கொண்டேயிருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியும். நாம் ஜெயிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதும் தெரியும்! இதனால் நமக்கும் கஷ்டம், நம்மைச் சுற்றி இருக்கிறவர்களுக்கும் கஷ்டம் என்பதும் தெரியும். அப்படியிருந்தும் சூதாடுவார்கள். இதற்குக் காரணம் “சூதாடியின் பகற்கனவு” என்கிறார்கள் நிபுணர்கள். இந்த நிலைமைக்கு கட்டாய சூதாட்டம் அல்லது நிற்பந்த சூதாட்டம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவன் இருப்பது முழுவதையும் விட்டுவிடுவான்... கடன் வாங்குவான்... திருடுவான் - இருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் ஜெயித்து விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருப்பான். “விட்டதை எடுத்து விடுவேன்” என்கின்ற ஒரு நம்பிக்கைச் சுடர் அவனுக்குள்ளே எரிந்துகொண்டிருக்கும். இவனை மனநோயாளி என்று சொல்லிவிட முடியாது. என்னகாரணம் என்றால் இது மாதிரி ஆட்களிடம் மனப்போராட்டமோ கவலையோ, பதட்டமோ இருப்பதில்லை.

சில விசேஷமான குணங்கள் இவர்களிடம் உண்டு. எதிர்ப்புணர்ச்சி, சிறுபிள்ளைத்தனம், சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறியாத மனப்போக்கு, பொறுப்பில்லாத தன்மை, நெறிதவறி நடப்பது எல்லாம் இவர்களிடம் உண்டு. ஆனால் வெளிப்பார்வைக்கு சிநேகிதமாகவும் அன்பாகவும் இருக்கிறதாகக் காட்டிக்கொள்வார்கள். ஆதாயம் சுயலாபம் கருதியே பழகுவார்கள். இவர்கள் கேட்கின்ற பொழுது நாம் பணங்கொடுவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மைக் கைவிட்டு விடுவார்கள். நம் மீது அபாண்டமான பழி சுமத்தவும் தயங்க மாட்டார்கள. தங்களுடைய சூதாட்ட நடவடிக்கைகளுககு சாதகமான காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். “நீ வேண்டுமென்றால் பார் ஒரேநாளில் நான் இழந்தவற்றையெல்லாம் மீட்டு இலட்சாதிபதியாகிறேனா? இல்லையா பார்” என்பார்கள்.

தோற்றுப்போவதை ஒரு படிப்பினையாக இவர்கள் எடுத்துக் கொள்வதே இல்லை. தோற்றுப்போவதிலும் இவர்களுக்கு ஒரு அலாதியான சுகம். தனக்குத் தானே துன்பத்தை வரவழைத்துக் கொண்டு இன்பமடைவதற்கு “தன்வதை சுகம்” (Masochist) என்று பெயர். இவர்கள் எல்லோரும் அந்தரகம்.

சிலர் எப்படித்தெரியுமா? மந்திர எண்ணங்களை வரவழைத்துக் கொள்வது. சூதாடுவதற்காக அலுவலகத்தில் கையாடல் செய்வது. மற்றவர்களிடமிருந்து திருடுவது. இந்த மந்திர எண்ணம் தீவிரமாய் விட்டது என்றால் ஒரு மாதிரியாகப் பேச ஆரமபித்துவிடுவார்கள். “தோல்விதான் சார் வெற்றிக்கு முதற்படி” என்பார்கள். தன்னால் பகடைக்காய்களையும் - குதிரையோட்டி (ஜாக்கி) களையும் கட்டுப்படுத்த முடியும் என்கின்ற பித்து நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள்.

சில சூதாடிகளை ஆராய்ந்து பார்த்ததில் என்ன தெரியவந்தது தெரியுமா? அவர்களெல்லோரும் குழந்தைப்பருவத்தில் அன்புக்காக ஏங்கியவர்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள். உதவிகளைபெற முடியாதவர்கள் ஆக இருந்திருக்கிறார்கள். இவர்கள் வளரவளர மற்றவர்களின் சௌகரியம் பற்றி அக்கறை இல்லாதவர்களாகி விடுகிறார்கள். அதிர்ஷ்ட தேவதை தன்னோடு இருக்கிறது என்கிற அசையாத நம்பிக்கை இவர்களுக்கு. இவர்களை திருத்துவது மிகவும் கஷ்டம். அதனால் பந்தையம் - சூதாட்டம் மாதிரியான விஷயங்களை விட்டு விலகியேயிருப்பது தான் நமக்கு நல்லது.

“என்குதிரை வேகமாக ஓடுவதற்கு என்ன வழி? என்று கால் நடை மருத்துவரிடம் கேட்டேன். அவர் ஒரு போத்தில் நிறைய மாத்திரைகளைக் கொடுத்து தினம் இரண்டு மாத்திரைகள் வீதம் கொடுக்கச் சொன்னார். முதல் நாள் இரண்டு மாத்திரைகள் கொடுத்தேன். கொடுத்துவிட்டு அதன் மேல் ஏறி உட்கார போனேன். அவ்வளவு தான்... அதற்குள்ளே அது அம்பு மாதிரி பாய்ந்து ஓடிப்போயிற்று” என்றான் ஒருவன். “அடடா! அதன்பின் நீங்கள் என்ன பண்ணினீர்கள்?” என்று கேட்டார்கள் “மீதியுள்ள மாத்திரைகள் முழுவதையும் நான் விழுங்கி விட்டு அதை துரத்திப் பிடித்தேன்” என்றான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# பேச்சில் இருந்து விலகும் முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்

## அமெரிக்கா புலிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறது.

அந்த முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் அவர்களைக் கோருகிறோம்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ், தற்போதைய நிலைமை தொடர்பாக வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறுகையில்,

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த விரும்பினால் அவர்கள் பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டும்.

இதை விடுத்து, அதிலிருந்து வெளிநடப்புச் செய்யக்கூடாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு உள்ள ஒரே வழி சமாதானப் பேச்சாகும்.

புலிகள இயக்கம் தமிழ் மக்களின அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பினால் பேச்சுவார்தை மேசையில இருந்து ஒரு போதும் விலகிவிடக் கூடாது.

அத்தோடு சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்ற காலப்பகுதியில் புலிகள் இயக்கமும் - அரசாங்கமும் யுத்த நிறுத்ததை மதித்து நடக்குமாறும் இருதரப்பினரையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

எதிர்வரும் ஜுன்மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் கூட்டத்தில் இலங்கை யுத்தத்தால் பதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளை மீளமைப்புச் செய்ய பெருமளவு உதவிகளை எதிர்பார்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கிக்கொள்வதற்கு புலிகள் இயக்கம் எடுத்துள்ள முடிவு அந்தச் சந்தர்ப்பத்தை இழக்கச் செய்துவிடும் என்று தெரிவித்துள்ளார். (உ)

# தமிழர் பிரதிநிதிகளான புலிகள் பேச்சில் இருந்து விலகக் கூடாது

## பிரான்ஸ் வெளியுறவுத்துறை அறிக்கை

(கொழும்பு)

இருபது ஆண்டுகாலப்போரை முடிவுக்கு கொண்டுவரும் வகையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படாத வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு மேசைக்கு திரும்ப வேண்டுமென பிரான்ஸ் கோரியுள்ளது.

தமிழர்களின் பிரதிநிதிகளாக செயற்படும் விடுதலைப்புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிச் செல்லக் கூடாது என பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும்,

உலக நாடுகள் எதிர்பாராத வகையில், இருதரப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்துள்ளன. ஆகவே, இருதரப்பினரும் தற் போதைய பேச்சுக்களில் தடங்களுக்கு முடிவு கண்டு அதைத் தொடரவேண்டும்.

இதுவே உலகநாடுகள் அனைத்தினது விருப்பமும் ஆகும் எனவும அவ்வறிக்கைளில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இப்பேச்சு வார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் கலந்து கொள்ளுவர் என நம்பிக்கை தெரிவித்துள்ளன.

அத்துடன், இலங்கையின எதிர்க்கட்சிகளும் இப்பேச்சுவார்த்தைகளைத் தொடருமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராசி பலன்

26.04.2003

(சித்திரை 13, சனி)

**தசமி மு. ப. 11.00 வரை**
**சதயம் பி.இ. 2.38 வரை**
**இராகுகாலம் 8.59 - 10.29**
**சுபநேரம் 2.59 - 4.29**
**திருநாவுக்கரசுநாயனார் குருபூசை**

**மேடம்**
குடும்பத்தில் நல்ல சம்பவம், போசன சுகம், காரிய சித்தி, பெருமையடைதல்

**இடபம்**
செய்தொழில் விருத்தி, தர்மம், தூரதேச செய்தி, எடுத்தகாரியம் கைகூடும்

**மிதுனம்**
மனக்கட்டுப்பாடு, தொழில் நன்மை, உடல்நலக் குறைவு, காரியதாமதம்

**கடகம்**
காரியதடங்கல், வாகன பயம், குடும்பத் தகராறு, போசனசுகம்

**சிங்கம்**
சென்றஇடத்தில் செல்வாகு, பிரயாண சுகம், காரிய நன்மை, கலந்துரையாடல்

**கன்னி**
சந்தோசமான சம்பவம், முயற்சி கைகூடும், நோய் குணமடையும், புதிய தொழில் சிந்தை

**துலாம்**
குடும்பக் கவலை, ரோகநிலை, அவமதிப்பு, முயற்சி தாமதமாகும்,

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, ஆரோக்கியக் குறைவு, பெரியோர் ஒத்தாசை, காரியசித்தி

**தனுசு**
அன்னியர் சந்திப்பு, எடுத்தகாரியம் கைகூடும், வருமானம் அதிகரிக்கும், பிரயாணம்

**மகரம்**
நிலைக்கேடு, மாதர் நட்பு, விதண்டா வாதம், முயற்சி தாமதம்

**கும்பம்**
பிறர் மதிப்பு, தடைப்பட்ட காரியங்கள கைகூடும், மனமகிழ்ச்சி, தெய்வ சிந்தை

**மீனம்**
சுபகாரியம், அமைதிக்குறைவு, வீண்வார்த்தை, தொழில் கஷ்டம்
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

# இலங்கைக்கு நிதி வழங்க தாய்லாந்தும் முன்வருகை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பல அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க தாய்லாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

துறைமுகங்கள், கொழும்புப் பங்குச் சந்தை, வர்த்தக சந்தை என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்கு இந்நிதி ஒதுக்கப்படவுள்ளது.

அண்மையில், இலங்கைக்கு விஜயம் செய்த தாய்லாந்து விசேட வர்த்தகப் பிரமுகர்கள் இந்த நிதி உதவி தொடர்பான இணக்கப்பாட்டை வழங்கியுள்ளன.

அடுத்தமாதம் இடம்பெறவுள்ள தாய்லாந்து பிரதமரின் இலங்கை விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள இந்த விசேட வர்த்தகப் பிரதிநிதிகள் இலஙகை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(உ-8)

# பிரதமர் - கூட்டமைப்பு விசேட சந்திப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இச்சந்திப்பின போது கூட்டணி உறுப்பினர்கள் சமாதானப்பேச்சுவார்த்தைகள் மீண்டு ஆரம்பிக்கப்பட வேண்டுமென பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம், கட்சியின் பொதுச செயலாளர் இரா. சம்பந்தன் ஆகியோரே பிரதமரைச்சந்தித்துள்ளனர். (உ-8)

# சார்ஸ் நோய் பரவியுள்ள நாடுகளுக்கு செல்ல வேண்டாம்

## சுகாதார அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

சார்ஸ் வைரஸ் தொற்றுக்கு உட்பட்டுள்ள நோயாளர்கள் இருக்கும் நாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டாம் என சுகாதார அமைச்சு மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சார்ஸ் நோய்க்கு இலக்கான எவரும் இதுவரை நாட்டில் இனங்காணப்படாதபோதிலும், இது பற்றி ஆராயவென சுகாதார அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் கூட்டமொன்று நடைபெற்றது.

இந்நோயாளர்கள நாட்டினுள் புகுவதைத் தடுக்க கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இந்நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இறப்பர் செய்கை

(கொழும்பு)

ஒரு இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள பெருந்தோட்ட உட்கடடமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உலகநாடுகளில் இறப்பருக்கான கேள்வி அதிகரித்துள்ளதால், இப்பயிர்சசெய்கையை விரிவுபடுத்தவும்மீள் நடுகையைமேற்கொள்ளவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-8)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று
-குறள்-

# வலம்புரி

## நெக்குருக்கும் இழப்பு

முன்னாள் யாழ்.ஆயர் அதிவணக்கத்துக்குரிய அருட்கலாநிதி வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்த மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை ஏற்றுக் கொண்டார். எண்பத்தாறு ஆண்டுகள் இந்த மண்ணில் வாழ்ந்த ஆண்டகை அவர்கள் துறவு பூண்டு யேசுபிரானின் போதனைகளைப் பின்பற்றி மக்கள் பணி செய்தார் எனில் அதனை இந்த மண்ணில் வாழ்வோர் எளிதில் மறந்து விட முடியாது. உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற யேசுபிரானின் உயர்ந்த சிந்தனையை சிரமேற்கொண்டு 62 ஆண்டுகள் மக்கள் பணியாற்றிய ஆண்டகை அவர்களால் இந்த மண் புனிதமடைந்தது. பாவகாரிகளை மீட்பதற்காக மண்ணுலகுக்கு வந்த பிதா மகன் எவ்வாறு பிறரின் பாவங்களை சுமந்து கொண்டாரோ அதே போல் யுத்தத்தின் கோரதாண்டவத்தால் சிதைந்து போன யாழ்ப்பாணத்தில் மக்களோடு மக்களாக இருந்து மக்களுக்காகப் பணியாற்றிய அதிவண தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பணியை ஈழ வரலாறு நிச்சயம் தன்னுள் பதிந்து கொள்ளும்.

ஆண்டகை அவர்கள் 1973 தொடக்கம் 1992 வரை யாழ் மறை மாவட்டத்தில் ஆயராக இருந்தபோது யாழ். குடாநாடு இன யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிப்படைந்திருந்தது. அந்த நேரத்தில் யாழ்.குடாநாட்டு மக்களின் அவல நிலையை இலங்கை அரசுக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்தும் பணியை ஆண்டகை அவர்கள் மிகச் சிறப்பாக மேற்கொண்டார்.

அரசியல்வாழ்வு ஆன்மீகப் பணிக்கு உகந்ததல்ல என்பதை இதயபூர்வமாக ஏற்றுக்கொண்ட ஆண்டகை அவர்கள் அரசியல் பழி வாங்கல்களும், இன அழிப்புகளும் நடைபெற்ற போதெல்லாம் அவற்றை வெறுமனே பார்த்திருக்கவில்லை. தமிழ் மக்கள் படும் துன்பத்தை துணிவோடு நின்று சர்வதேசத்துக்கு துலாம்பரப்படுத்தினார். யாழ் மறை மாவட்டத்தின் ஆயர் என்ற உயர் இறைபணி நிலையில் நின்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக எவ்வளவு தூரம் குரல் கொடுக்க முடியுமோ அந்தளவு தூரம் தனது குரலை ஒலிக்கச் செய்து மக்கள் உயிர் காத்த மாண்பினராக-திசையறியாது திகைத்த மக்களுக்கு வழி காட்டும் அருள்ஒளிவிளக்காக விளங்கினார். அரசியலுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தனது ஆன்மீகப் பணியில் இடந்தராத ஆண்டகை அவர்கள் கிறிஸ்தவம், சைவம் என்ற பேதம் இன்றி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற வேத வாக்கின்படி ஒழுகினார் என்றால் அவரின் அந்த அற்புதமான உயர்ந்த சிந்தையை உலகம் என்றும் போற்றும்.

## புலிகளின் அறிவிப்பால்

# டோக்கியோ மாநாட்டு நிதி கைநழுவிப் போகும் அபாயம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் 9,10ம் திகதிகளில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் புனரமைப்பு, அபிவிருத்தி திட்டங்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கபபடும் 2500கோடி நிதியுதவி கிடைக்காமல் போகக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதை விடுதலைப்புலிகள் இடைநிறுத்தியிருப்பதை அடுத்தே இந்நிலை எழுந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் வடக்குக் கிழக்கு பகுதிக்கென 2500 கோடி டொலர்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி ஆகியன தயாரித்த அறிக்கையின்படி இத்தொகையினை வழங்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பான உத்தியோகபூர்வமான இணக்கப்பாடு டோக்கியோவில் இடம்பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் மேற்படி மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றா விட்டால் வடக்கு கிழக்கிற்கான இப் பண உதவி கிடைக்காமல் போகலாம் என கருதப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாகவே சுமுகநிலை ஒன்று ஏற்படுத்தப்பட்டுவிடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# வெடிக்காத செல்கள் நல்லூரில் மீட்பு

(கொழும்புத்துறை)

கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து வெடிக்காத நிலையில் இருந்த மூன்று செல்கள் ஹலோ ரஸ்ட் நிறுவனத்தினரால் மீட்கப்பட்டது.

வீட்டில் மண் வெட்டியபோது இம் மூன்று செல்களும் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து ஹலோ ரஸ்ட் நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அவற்றை வெடிக்க வைப்பதற்காக வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றனர். இவை கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இராணுவ முகாம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-51)

# புலிகளின் குரல் விசேட ஒலிபரப்பு

(கிளிநொச்சி)

ஆனையிறவு வெற்றிச் சமரின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை புலிகளின் குரல் வானொலியில் சிறப்பு நிகழ்ச்சிகள் காலை 6.30 மணியிலிருந்து இரவு 10.30மணி வரை ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளன. (த-51)

# இலவச ஆங்கில வகுப்பு

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தினரால் இளைஞர் யுவதிகளுக்கான இலவச ஆங்கில வகுப்பு நாளை காலை 10.30மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. இந்த ஆங்கில வகுப்பில் எவரும் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (த-51)

# மலசலகூட வசதியில்லை

(கல்வயல்)

சாவகச்சேரி நகரப் பகுதியில் மலசலகூட வசதியின்மையால் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக சாவகச்சேரி பேருந்து நிலைய சந்தைப் பகுதி என்பனவற்றிற்கு மலசலகூடம் அமைக்கப்படாமையால் பயணிகள் மற்றும் பொது மக்கள், வர்த்தகர்கள் ஆகியோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (உ-36)

# பாராளுமன்றத்தைக் கூட்டுவது குறித்து பிரதமரே தீர்மானிக்க வேண்டும்

## சபாநாயகர் எதிர்க்கட்சிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

திட்டமிட்ட திகதிக்கு முன்னதாக பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமாயின் அது குறித்த தீர்மானத்தை பிரதமரே எடுக்க வேண்டும் என்று சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா அறிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து இடை விலகியிருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விவாதிக்க பாராளுமன்றத்தை விரைந்து கூட்ட வேண்டுமென்று எதிர்கட்சிகள் சபாநாயகரைக் கோரியிருந்தமை தொடர்பிலேயே மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் பலர் வெளிநாடு செல்வதால் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வை மே மாதம் 6ஆம் திகதி நடத்துவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

# கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புனித மரியாயின் சேனையின் கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடுநிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் சகோதரி கைவலட் இம்மானுவேல் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ)

# உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் முதல் 3 மாதங்களில் இலங்கைக்கு வந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை அதற்கு முந்திய வருடத்தை விட 29.5 சதவீதத்தல் அதிகரித்துள்ளது. என உலலாசத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

2001ஆம் ஆண்டில் 93ஆயிரத்து 63 உல்லாசப் பயணிகளும், 2002 ஆம் ஆண்டு 1 லட்சத்து 20 ஆயிரத்து 555 உல்லாசப் பயணிகளும் இலங்கை வந்துள்ளனர். (உ-8)

# மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக ஐக்கியத்துடன் குரல் கொடுப்போம்

## புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியில் சிந்தித்து தூர நோக்குடன் முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டிய ஒரு முக்கிய தருணத்திலே நாம் தற்போது இருக்கின்றோம்.

சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான அரசியல் தீர்வை வற்புறுத்தி அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களை எதிர்த்து தொழிலாளர், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளை வற்புறுத்தி எதிர்வரும் மே தினத்தில் அனைத்து நேர்மையான புரட்சிகர இடதுசாரி ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு அணிதிரண்டு போராட்ட உறுதியினை எடுத்துக் கொள்வது அவசியமானது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி மேதின அறைகூவல் விடுத்துள்ளது.

இக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் ,

எமது மண்ணிலும் தொழிலாளர்கள் விவசாயிகள் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வந்த வரலாறு உண்டு. அவர்கள் செங்கொடியின் கீழ் அணிதிரண்டு போராடிப் பெற்ற உரிமைகளே இன்றுவரை அனுபவிக்கப்பட்டும் வருகின்றன. இருப்பினும் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இடம்பெற்று வந்த பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் காரணமாக தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களது வாழ்வு சிதைக்கப்பட்டு அழிவுகளைக் கண்டு கொண்டது.

இன்றும் கூட யுத்த நிறுத்தமும் சமாதான சூழலும் ஒரு தற்காலிக நிலையிலேயே இருந்து வருகின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயபூர்வத் தீர்வு காணப்படாது விட்டால் யுத்த அபாயம் மீண்டும் ஏற்படவே செய்யும். ஆதலால் அரசியல் தீர்வின் அவசியத்தை மக்கள் சார்பாக நின்று வலியுறுத்த வேண்டியுள்ளது. ஒருபுறத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் இடம்பெறும் அதேவேளை மறுபுறம் அதனைக் குழப்பும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளின் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இன்றைய சமாதான சூழலைப் பயன்படுத்தி உள்நாட்டு பெருமுதலாளித்துவ சக்திகளும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளும் தாராளமயம் தனியார் மயத்தின் மூலம் உலகமயமாதலை முன்தள்ளி வருகின்றன. இதனால் பொருளாதார, அரசியல், சமூக, கல்வி பண்பாட்டுத் துறைகள் அனைத்தும் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டும் வருகின்றன.

மேலும் அமெரிக்கா தனது உலக மேலாதிக்கத்திற்காக இலங்கையைப் பல வழிகளிலும் பயன்படுத்தும் திட்டங்களுடன் செயல்படுகின்றது. அதற்கு ரணில் தலைமையிலான ஆட்சி செங்கம்பளம் விரித்து வரவேற்பு வழங்கி வருகின்றது. இதில் மேற்குலகமும், ஜப்பானும் பங்குகொண்டு தமது பொருளாதார வர்த்தக முதலீட்டு நலன்களை நிலைப்படுத்தி பாதுகாத்து வருகின்றன.

இதற்குப் போட்டியாக இந்தியா இப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை இறுக்கிக்கொள்ள இலங்கையை ஒரு முக்கிய மையமாகக் கொண்டு செயற்படுவதைக் காணலாம். தற்போதைய பேச்சு வார்த்தையைக் குழப்புவதில் இந்தியா பேரினவாதிகளின் பக்கம் நின்று செயற்படுவதையும் காண முடிகிறது.

நேடியாகவும் மறைமுகமாகவும் அமெரிக்கா இந்திய ஆதிக்கப் போட்டி இலங்கையில வலுவடைந்து வருகிறது. இதற்கு இலங்கை தன்னையே பலியாக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சிங்கள மக்கள் தமது சுதந்திரம், சுயாதிபத்தியத்தை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

தமிழ் மக்களோ தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை கைகழுவி கொள்வதற்கான நிர்ப்பந்தத்தையும் எதிர்நோக்கி நிற்கின்றனர். இத்தகைய அரசியல் சூழல் ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டியதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# திருமலை மாணவி சென்னையில் கொலை

(கொழும்பு)

சென்னையில் கல்வி கற்றுவந்த திருகோணமலையைச் சேர்ந்த 18 வயது மாணவி ஒருவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என சென்னைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலத்தை பொலிஸார் அண்ணா நகரில் உள்ள வீடொன்றிலிருந்து மீட்டுள்ளனர்.

இப் பெண் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார் என்பது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (உ-8)

## தினசரி தியானம்

### ஞானியின் பெருமை

ஞானியின் பண்பு ஆழங்காண முடியாததாகும். உங்களுடைய அரைகுறை அறிவால் அவரைப்பற்றிக் கணிப்புச் செய்யாதீர்கள். அறியாமை என்னும் போதாத அளவு கொண்டு அவரது தெய்வீகத் தன்மையை அளக்காதீர்கள். பரம் பொருளிடமிருந்து நேரடியாக அல்லது அருட்பார்வை காரணமாக அவர் பேரொளி பெற்றிருக்கிறார். பார்க்க இயலாத அல்லது தெரியாத பொருள்கள் பற்றிய அறிவும், அவருக்கு உண்டு. முழுமையானவர் அழிக்க இயலாத பண்புகளில் ஒன்றியிருப்பவர்.. ஒரு ஞானியெல்லாம் தானாவதுடன் அவற்றின் கருப்பொருளாகவும் ஆகிறார்.

சுவாமி சிவானந்தர்

# டோக்கியோ மாநாட்டில்
# விடுதலைப்புலிகள் கலந்துகொள்வர்!
## ஜப்பான் தூதரகம் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வார்கள் என்று தாம் உறுதியாக நம்புவதாக ஜப்பான் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொள்வதாகவும் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதில்லை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலாக ஜப்பான் தூதரகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அவ் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிடப் பட்டது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் பூரண ஆதரவு வழங்கும் அதேநேரம் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதிலும் ஜப்பான் உறுதியாக உள்ளது.

இதேவேளை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் வடக்குக் கிழக்கு மீள் கட்டுமானம், புனரமைப்புக் குறித்து முக்கியமாக ஆராயப்படும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது. (இ)

### போரைத்......

விடுத்துள்ளார்.

சுவாமிகள் விடுத்த வேண்டுகோளில்: அரசும் விடுதலைப் புலிகளும் முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளை முழு உலகமுமே பாராட்டி நிற்கிறது. இரு தரப்பும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வை அடையும் போது அது சர்வதேசத்துக்கு முன்னுதாரணமாகத் திகழும்.

அத்தகைய சமாதானத்தை அடைவதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் மேன்மேலும் பாடுபட வேண்டும். சமாதான முயற்சியை விடுதலைப் புலிகளோடு முன்னெடுத்துச் செல்லும் அரசு, எவ்விடத்திலும் புலிகள் சமாதானத்தின் ஓர் அம்சம் என்பதை மறந்து செயற்படலாகாது என்றும் தனது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ளார்.(ந)

### அதிவண.........

சமூகம் இவருக்கு மும்மடி விழாவை எடுத்திருநதது.

அத்துடன் இவரின் சேவையை மதித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1999ல் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கியிருந்தது.

இவரது நல்லடக்கம் எதிர்வரும் 28ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது. (த-77)

### கதிர்காமரின்........

இலங்கையின் இறையாண்மைக்குட்பட்டு சகல தரப்பு மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலித்து பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது எனக் கூறினார். (வ)

### கடற்பிராந்திய.......

சகர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் பத்திரிகையாளர் மாநாடொன்று நடாத்தப்பட்டது.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் லக்ஸ்மன் கதிர்காமர் அறிக்கையை வெளியிட்டு வைத்துப் பேசுகையில்:

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்திவரும் அதேவேளை, விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதம் முற்றாகக் களையப்பட வேண்டும். கடலில் கடற்புலிகளின் சட்ட விரோத நடமாட்டங்களை கண்காணிப்பதற்கு இந்தியா உட்பட மூன்று நாடுகளை ஈடுபடுத்த வேண்டும் தற்போதைய யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவுக் கொள்கையினால் அவர் மீது நாம் நம்பிக்கை இழந்துள்ளோம்.

இலங்கையின் இறையாண்மைக்கும் ஒற்றுமைக்கும் அச்சுறுத்தும் வகையில் புலிகளின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் கண்காணிப்புக் குழு துணைபோகின்றது. இதனை முறியடிக்கும் வகையில் கடற் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இந்தியா உட்பட மூன்று நாடுகளை அதில் ஈடுபடுத்தவேண்டும்.

அதேவேளை தற்போதைய சூழ்நிலையில் கணிசமான அளவு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான அதிகாரத்தை அரசியல் அமைப்பு அவருக்கு வழங்கியுள்ளது என்று தெரிவித்த கதிர்காமர் சர்வதேச கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளிலும் நாம் நம்பிக்கை இழந்துவிட்டோம் விடுதலைப்புலிகளின் கடற்படை அணியை ஒரு படையணியாக அங்ககரிக்க வேண்டும் என்ற யோசனையை கண்காணிப்புக் குழுவுக்கு மூன்வைத்துள்ளதால் அதனை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன் இலங்கையின் கடற்படையின் பலத்தை குறைவாக மதிப்பிடவே கண்காணிப்புக் குழு இவ்வாறு தெரிவித்துள்ளது எனவும் நாம் கருதுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலய பகுதிகளில் இராணுவம் விலகிக் கொள்வது தொடர்பாக யாழ் குடாநாட்டு தளபதி சரத் பொன்சேகாவும், கடற்புலிகளை தனிப் படையணியாக அங்கீகரிக்க வேண்டும் என கண்காணிப்புக் குழுவினர் அறிக்கையை எதிர்க்கும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரியையும் நாம் பாராட்டுவதுடன் அவர்களது கருத்துக்களையும் ஆதரிக்கின்றோம்.

தமிழழ விடுதலைப்புலிகளுக்கு மட்டும் தனித்துவம் வழங்காமல் அனைத்து தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வும் அமைய வேண்டும் அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அச் செய்தியாளர் மாநாடடில் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்தார். (ம)




இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை

சோட்டாணிக்கரை ஸ்ரீ பகவதி அம்மன் அருள் பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

மணி சாமி அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை ஜாதகம், எண்கணிதம்

நினைத்த காரியம் பார்க்கப்படும்

ஒரு முறை விசயம் செய்து பாருங்கள் உண்மைபுரியும்

மணி சாமி அவர்கள், 54, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி, பழைய லிங்கம் கூல்பார் அருகாமை)
யாழ்ப்பாணம்

(C/6070)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் விஷேட கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 27-04-2003 ஞாயிறு காலை 10மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ். மாவட்டச் செயலகம் "தந்தை செல்வா அகத்தில்" நடைபெறும் இக் கலந்துரையாடலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்மந்தன் அவர்கள் கலந்துகொண்டு இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றிக் கருத்துரை வழங்குவார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராசா திரு. ந. ரவிராஜ் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர். குறுகிய கால ஏற்பாடாகையால் தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியவில்லை. தயவுசெய்து தவறாது சமுகம் தருமாறு வேண்டுகின்றேன்.

அழைப்பாளர்
நடராஜ் ரவிராஜ்
பாராளுமன்ற உறுப்பினரும்
த.வி.கூ. நிர்வாக செயலாளரும்

(C/6071)



MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழப்பாணம்.


## சைக்கிள்களில் சமாந்தரமாகச்சென்ற 25பேர் நெல்லியடியில் கைது
### தண்டப்பணமாக தலா ரூ.1000 அறவீடு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 25பேர் நெல்லியடிப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் தலா 1000 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை வீதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வது தண்டனைக்குரிய குற்றமென்றும், அவ்வாறு வீதிகளில் சமாந்தரமாகச் செல்வோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவர் என்றும் யாழ். போக்குவரத்துப் பொலிஸார் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இந்த நடைமுறை கடந்த 21ம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

### பெற்றோலின்.......

அதிகரிப்பதென கூட்டுத்தாபனம் நிர்ணயித்திருந்தது. அதனடிப்படையிலேயே பெற்றோலின் விலை உயர்த்தப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் பெற்றோலிய கூட்டுஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் ரூ. 63.50 விற்கப்பட்ட பெற்றோல் நேற்று நள்ளிரவு முதல் ரூ.64.50ற்கு விற்பனை செய்யப்படுவதாக வடபிராந்திய பெற்றோலிய கூட்டுஸ்தாபன பிராந்திய முகாமையாளர் எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (இ-5)

### பாதுகாப்பு.......

யினர் மத்தியலும் பெரும் குளப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா முப்படைகளின் தளபதிகளையும் எதிரிக்கட்சித் தலைவர்களையும் அழைத்து நேற்றிரவு அவசர மந்திராலோசனை நடத்தியுள்ளார். (ம)

### சக்திகிரீவன்......

உள்ள பொது அமைப்பு ஒன்று பொறுப்பேற்று நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் சாவகச்சேரி நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். (இ)

## முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் சம்மந்தமாக விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு மிடையில் கலந்துரையாடல் ஒன்று இன்று நாவலர் வீதியில் அமைந்துள்ள மஸ்ரஉத்தீன் பாடசாலையில் நடைபெற உள்ளது.

இக் கலந்துரையாடலில் முஸ்லிம் மக்களின் தற்கால நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையிலும் அவர்கள் மீள் குடியேறுதலில் உள்ள பிரச்சினைகள் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (இ-5)

## மீள் குடியமர்வு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு பயனாளிகளை தெரிவுசெய்யும் முகமாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் ஜே-94, ஜே-95, ஜே-96 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தோருக்கு இன்று காலை 10மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திலும் ஜே-91, ஜே-92, ஜே-93 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தோருக்கு இன்று பிற்பகல் 2மணிக்கு கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலிலும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (த-5)

## ஆறாத் துயரம்

திருமறைக் கலாமன்றப் பேராளரும் அதன் இடைக்கால வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் என்றும் உதவும் கரமாக இருந்தவருமான

ஓய்வுபெற்ற யாழ். மறை மாவட்ட ஆயர்



மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

அவர்களின் மறைவு மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. ஓர் நல்ல ஆயனை இழந்து விட்டோம். கலையின் காவலனை இழந்து விட்டோம். எம் மன்றத்தை என்றுமே அன்பு செய்த மாதவத்தோனை இழந்துவிட்டோம் அவருடைய ஆன்மா சாந்தியடைய அனைத்துக் கலைஞர்களும் இறைவனை வேண்டுகிறோம்.

சாந்தி!

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

இயக்குனருடன்
அனைத்துக் கலைஞர்களும்
திருமறைக் கலா மன்றம்

(C/6072)

## மரண அறிவித்தல்

### மேதகு ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

1973ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரை யாழ். ஆயராக பணியாற்றி இளைப்பாறிய ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை தமது 86ஆவது வயதில் 25-04-2003 அன்று காலமானார்.

இவரின் நல்லடக்க ஆராதனை சடங்குகள் 28-04-2003 திங்கட்கிழமை மாலை 4மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

அருள்திரு ஜே. நீக்கிலஸ்
யாழ். மறை மாவட்ட குரு முதல்வர்

(C/6073)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.